மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 5 / மே 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



# தங்கமங்கை கோமதி மாரிமுத்து



**உங்கள் வாழ்வில் அண்ணா எப்படி நுழைந்தார்?**

தொ. பரமசிவம் - நேர்காணல்



சமூக சேவையில் உச்சம் கண்ட **மருத்துவர் கலா**


பன்மை வெளி
பெ.மணியரசன்
கி.வெங்கட்ராமன் எழுதிய
புதிய நூல்கள் விற்பனைக்கு
திராவிடம்
தமிழர் மறுமலர்ச்சியை வளர்த்ததா? வழிமாற்றியதா?
பெ. மணியரசன்
சூழலியல்
கி. வெங்கட்ராமன்
விடுதலைப் போராட்டங்கள்
தமிழீழம் இனி
போழிவில் தமிழர் தாயகங்கள்
கடல் கன்னி
தமிழ்மொழித் தொன்மை
தமிழர் வாழ்வியலும் மருத்துவமும்
அயல் இனத்தார் ஆதிக்கம்
தமிழர் ஆன்மிகம்
காவிரி
நேற்று - இன்று - நாளை
பெ.மணியரசன்
பெரு நெருப்பு
பாவரங்கக் கவிதைகள்
சாதியும் தமிழ்த்தேசியமும்
பெ. மணியரசன்
கலகக் குரல்
வள்ளலார்
கி. வெங்கட்ராமன்
உணவு - உழவு எதிர்காலம்
தமிழர் நீர் மேலாண்மை
தமிழர் அறிவியல் மரபு
தொடர்புக்கு: 044 24742911 / 98408 48594 / 94439 18095

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly MAY 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**மவுண்ட் கோபால்**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை– 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

தங்க மங்கை கோமதி மாரிமுத்து (தலையங்கம்)........ 4

நால் வருணம் ஒழிந்ததா?
– வே. ஆனைமுத்து........ 5

உலக பெரும் கவிஞர் பாரதிதாசன்
டாக்டர் ச.க. இளங்கோ........7

சமூக சேவையில் உச்சம் தொட்ட மருத்துவர் கலா
உமாமகேஸ்வரி ........9

அன்னையர் தினம்
விசவனூர் வே. தளபதி........ 10

சட்டமேதை அம்பேத்கர்........ 14

பார்ப்பனர்களை புரோகிதத்திற்கு அழைக்காதீர்
லாலுபிரசாத் யாதவ்
மயிலாடன்........ 15

புற்றுநோய்: கேன்சர் இல்லா உலகம்........ 16

தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் ஆறுபதில்கள்........ 18

கஜா புயலும் வடக்கு செண்டினால் தீவுவாசிகளும்........19

தேர்தல் பத்திரம்........ 22

கடலில் மிதக்கும் கழிவுகளுக்கு விண்ணிலிருந்து தீர்வு?
கே. பவானி ........23

ஆழிப் பேரலை
– சோழநாச்சியார்........ 24

உங்கள் வாழ்வில் அண்ணா எப்படி நுழைந்தார்
– தொ. பரமசிவம்........ 28

பொன்பரப்பி கலவரம்........ 29

தமிழீழத் தமிழர்களில் குருதி
இங்கிலாந்திடம் நீதி கேட்கிறது........ 33

கோடை காலத்தில் உதடுகள்........ 36

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# தங்கமங்கை கோமதி மாரிமுத்து

தகுந்த காலணிகள்கூட இல்லாமல் ஆசிய தடகளப் போட்டியில் இந்தியாவிற்கு தங்கம் பெற்றுத் தந்திருக்கிறார் கோமதி மாரிமுத்து. இவர் பேசுவதைவிட அதிகமாக செயலில் காட்டுப வராகவே இருக்கிறார். தனது தந்தை ஒவ்வொரு நாளும் பயிற்சிக்காக அழைத்துச் சென்றதைப் பகிர்ந்து கொள்ளும்போது கண் கலங்குகிறார்.

தங்கம் வென்று வந்த தமிழ்மகளுக்கு உரிய அங்கீகாரத்தை இந்தியா கொடுத்ததா என்றால் இல்லை என்பதுதான் உண்மை. தலைமை அமைச்சர் இது பற்றி வாயே திறக்கவில்லை. விளையாட்டுத்துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர், நமக்கும் இதற்கும் தொடர்பே இல்லை என்பது போல் இருக்கிறார். மாநில விளையாட்டுத் துறையும் அப்படியே இருக்கிறது. தனி மனிதர் களும், சில அமைப்புகளும் கோமதியின் வெற்றி யைக் கொண்டாடின, பாராட்டின. அதற்குப் பின்னர்தான் தமிழக அரசு விழித்துக் கொண்டு, போனால் போகிறது என்று பரிசு அறிவித்திருக் கிறது.

இம்மாதிரியான கண்டுகொள்ளாத போக்கு அரசுகளிடம் இருந்தால், விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்கள், தகுதி உள்ளவர்கள் எப்படி தங்கள் நாட்டுக்காக விளையாட முன்வருவார்கள்? பணக்காரர்கள், நகரங்களில் வசிப்பவர்கள், உயர்சாதி என்று சொல்லிக் கொள்கிற வீணர்கள் தங்கம் வென்று வந்திருந்தால் அரசுகள் இப்படி நடந்து கொண்டிருக்குமா? துன்பத்தோடு வாழ்நா ளெல்லாம் பின்னிப் பிணைந்து வாழ்ந்து? கொண்டி ருக்கும் இளைஞர்கள் தங்களது திறமைகளை வெளிக்கொணர அரசுகள் ஏன் முன்வருவதில்லை. அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டின், இந்தியாவின் குடிகள் இல்லையா?

உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கோமதி மாரிமுத்து விடம் கேட்டால், "என்னைப் போன்ற பலர் ஆர்வத்தோடு சாதிக்க வேண்டும் என்ற நினை வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் குத் தேவையான உணவு கிடைப்பதில்லை, விளையாட்டிற்குத் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கான வசதிகள் இல்லை. இவற்றை எல்லாம் அரசு செய்து கொடுத்தாலே நான் மகிழ்ச்சி அடைவேன் என்கிறார். அரசு செய்யுமா?



# நால் வருணம் ஒழிந்ததா?

அசோகனின் கொள்ளுப் பேரன் பிரிகர்ரதன், கி.மு.182இல், புஷ்யமித்ர சுங்கனால் கொல்லப் பட்டான். அரசனான அவனிடமே சேனாதிபதியாக இருந்தவன்தான் புஷ்யமித்ர சுங்கன்.

புஷ்யமித்ர சுங்கன்தான் அதுவரை செவி வழியாக இருந்த மனுநீதியைத் தொகுத்தவன்.

மனுநீதிதான் இந்துக்கள் பிறவியிலேயே நான்கு வருணத்தாராகப் பிறந்தார்கள் என்று கூறியது. அதன் செல்லுபடிப்பரப்பு இந்தியா முழுவதுக்கும் உண்டு.


தென்னாட்டைப் பொறுத்தவராயில் பராசர ஸ்மிருதி, யக்ஞவல்க்ய ஸ்மிருதி ஆகிய இரண்டும் தான் அதிகச் செல்வாக்கு உள்ளவை.

மேலே சொல்லப்பட்ட ஸ்மிருதிகளில் நால் வருணங்கள் கலக்கக்கூடாது என்று கட்டளை விதி இருக்கிறது. ஆனாலும் அதை மீறி நால் வருணத்தார் கலந்தார்கள்.

அவர்களுக்குப் பிறந்தவர்கள் 6400க்கும் மேற்பட்ட உள்சாதிக்காரர்கள் ஆவார்கள். நால்வருணங்களுக்கிடையே திருமண உறவு கூடாது என்பது 1872ஆம் ஆண்டினுடைய சிறப்புத் திருமணச் சட்டம் மூலம் செல்லுபடி அற்றதாக ஆக்கப்பட்டது.

அதாவது வெவ்வேறு வருணத்தைச் சேர்ந்த வர்கள் கலப்புத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்பட்டது. அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் உண்டு.

அதாவது மணமகனும் மணமகளும், தாங்கள் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் என்று உறுதி கூறவேண்டும். அது மட்டுமே நிபந்தனைகள்.



அதேபோல் 6400 உள்சாதிக்காகப் பிறவியினால் பிரிந்து கிடந்தவர்கள். 1949ஆம் ஆண்டினுடைய திருமணங்கள் செல்லும்படி கண்காணிப்பு 21ஆவது சட்டம் (Hindu Marriage Validity Act, XXl of 1949) வருணங்கள் மாறி திருமணம் செய்து கொள்ளு வதும், ஒரே வருணத்தில் உள்சாதி மாறித் திருமணம் செய்து கொள்ளுவதும் செல்லுபடி யாகும் என்றும், 1949 க்கு முன்னர் அப்படி வருணம் மாறியும், உள்சாதி மாறியும் செய்து கொண்ட திருமணங்களும் அம் முன்தேதி முதலே (Retrospective) செல்லும் எனவும் அய்யத்துக் கிடமின்றி வரையறை செய்தது.

மேதை அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்தபோது நிறைவேற்றப்பட்ட அரிய சட்டங் கள் இவை.

ஆனால் மேலே சொல்லப்பட்டபடி, நால் வருணங்கள் கலப்பதற்குத் தடை இருந்ததும் மக்களுக்குத் தெரியாது

அவர்கள் வருணம் மாறித் திருமணம் செய்து கொள்ள 1872இல் சட்டம் வந்ததும் மக்களுக்குத் தெரியாது.

உள்சாதி மாறித் திருமணம் செய்துகொள்வது சட்டப்படி குற்றம் என்பதும் மக்களுக்குத் தெரியாது.

1949ஆம் ஆண்டினுடைய சட்டப்படி உள்சாதி மாறித் திருமணம் செய்து கொள்ள உரிமை உண்டு என்பதும் மக்களுக்குத் தெரியாது.

இவையெல்லாம் ஏட்டில் இருக்கின்றன. ஆனால் இவை கல்வி மூலம் மக்களுக்கு கற்பிக்கப் படவில்லை.

அதனால்தான் புத்தர், மகாத்மா புலே, வடலூர் வள்ளலார், அயோத்திதாசர், பெரியார், மேதை டாக்டர் அம்பேத்கர் ஆகியோர்...

கி.மு. 500 முதல் கடந்த 2500 ஆண்டுகள் நால்வருணத்தை எதிர்த்தும், உள்சாதித் தடைகளை எதிர்த்தும், பரப்புரை செய்தும் அக்கொள்கைகள் இன்றுவரை வெற்றிபெறவில்லை.

நால்வருணப் பாதுகாப்பு, இந்துச் சட்டம் மூலம் அப்படியே வழக்குரைஞர்களுக்குக் கற்பிக்கப்படு கிறது.

அதுமட்டுமின்றி இந்திய அரசமைப்புச் சட்டம் பகுதி 3 அடிப்படை உரிமைகள் என்கிற பகுதியில் உள்ள 13ஆம் விதியில் உள்பிரிவு 3ஆ பிரிவின் படி செல்லுபடியாகிற சட்டம் (Law in force) என்பது எது?

## பெரியார், அம்பேத்கர் வழிவந்த நாம் இன்று என்ன செய்ய வேண்டும்? சட்டம் படித்த மேதை களைக் கூட்டிணைப்பு நால்வருணப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவுகளை நீக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று விவாதிக்க வேண்டும்

ஏற்கனவே ஒரு சட்டமன்றத்தாலோ அதிகாரம் வாய்ந்த வேறு ஒரு அமைப்பாலோ இந்தியாவில் இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் செய்யப்பட்டு, அது ஏற்கனவே எந்த ஒரு சட்ட அமைப்பாலும் நீக்கப்படாமல் இருந்தால் அந்தப் பழைய சட்டம் இன்றும் செல்லும் என்றே பொருளாகும்.

அத்துடன் நில்லாமல் அரசமைப்புச் சட்டம் 372ஆம் விதியில் 3ஆம் பிரிவில் விளக்கம் 1 என்று வருகிற பகுதியிலும் இதேபோல் சொல்லப் பட்டுள்ளது. இவையெல்லாம் 26.11.1949இல் தான் நிறைவேற்றப்பட்டன. இந்த பாதுகாப்பு இருக்கக் கூடாது என்று கருதிய அம்பேத்கர். 1947இல் அரசமைப்புச் சட்ட அவையில் முன்மொழிந்த “இந்து சட்ட திருத்த மசோதாவின்“ கடைசிப் பகுதியில் ஒரு விதியைத் தெளிவாக எழுதினார். எந்த பழைய சட்டமும் வழக்கச் சட்டமும், இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பிறகு செல்லுபடியாகமாட்டாது என்று எழுதினார்.

அந்தப் பகுதியைப் படித்த உடனே, அரசமைப் புச் சட்ட அவையின் தலைவர் இராசேந்திர பிரசாத், அம்பேத்கரிடம் நேரிடையாக அவையிலேயே, நீங்கள் முன்மொழிந்துள்ள இந்தப் பகுதி நிறை வேற்றப்பட நான் இடங்கொடுக்கமாட்டேன்“ என்று சொன்னார்.

பெரியார், அம்பேத்கர் வழிவந்த நாம் இன்று என்ன செய்ய வேண்டும்? சட்டம் படித்த மேதை களைக் கூட்டிணைப்பு நால்வருணப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவுகளை நீக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று விவாதிக்க வேண்டும் என நான் வேண்டுகிறேன்.

01.04.2019 வே. ஆனைமுத்து,

(சிந்தனையாளன் ஏப்ரல் மாத இதழில் அதன் ஆசிரியர் தோழர் வே. ஆனைமுத்து எழுதியுள்ள ஆசிரியவுரை)

# உலக பெரும் கவிஞர்

# பாரதிதாசன்



டாக்டர் **ச. க. இளங்கோ**
முன்னாள் இயக்குநர், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

பாரதிதாசன்20ஆம் நூற்றாண்ட தமிழ் இலக்கியத்தில் புரட்சிக்கவியாகத் திகழ்ந்தவர். அவர் ஏழு சூரியன்களின் ஆற்றலை வெளியிடுபவராகத் திகழ்ந்தார் என்பது உண்மையே. அவர் 1891ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 29ஆம் நாள் புதுச்சேரியில் பிறந்தார். பெற்றோர் கனகசபாபதி, இலக்குமி அம்மாள். பராதிதாசன் தன்னுடைய 14 வயதில் கவிதை எழுதத் தொடங்கி விட்டார். தொடக்கத்தில் அவர், சைவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதால், சிவனின் பிள்ளையான முருகனை வேண்டி பல பாடல்களைப் பாடியுள் ளார்.

தமிழ் இலக்கிய உலகில் முதன்மைக் கவிஞரும், விடுதலைப் போராட்ட வீரருமான பாரதியார் 1908ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு வந்தார். வேலுநாயக்கர் என்ற குடும்ப உறுப்பின ரின் திருமணவிழாவில் பாரதி தாசனைச் சந்தித்தார். பாரதியார் அந்த விழாவில் உள்ளார் எனபதை அறியா மலே, அவரின் பாடல் ஒன்றை பாரதி தாசன் பாடினார். இந்த நிகழ்வால் அவ்விருவருக்கும் நட்பு ஏற்பட்டது.

ஒருநாள் பலபேர் கூடிய அவையில், பாரதிதாசன் ஒரு பாடலை இயற்றிப் பாடுமாறு, அவரை பாரதி யார் பணித்தார். அவர் எங்கெங்கும் காணினும் சக்தியடா என்ற பாடலை உடனே பாடினார். பாரதியின் மறைவிற்குப் பின் பாரதிதாசன் பெரியார், மறைமலை அடிகளார் ஆகியோரின் கருத்துக்களில் ஆர்வம் கொள்ளத் தொடங்கினார். 1921ஆம் ஆண்டு பழனியம்மாள் என்பவரை மணந்து, சரசுவதி, வசந்தா, ரமணி என்ற மூன்று பெண்களுக்கும், மன்னர் மன்னன் எனும் ஒரு மகனுக்கும் தந்தை ஆனார்.

2971946 அன்று பச்சையப்பன் கல்லூரியில் நடந்த விழாவில் அறிஞர் அண்ணாவின் தலைமை யில், பாரதிதாசனின் கவிதை ஆற்றலைப் பாராட்டி, அவருக்கு 25 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டது.

உலகத்தின் புரட்சி எழுத்தாளர்களான ரூசோ, மார்க்சிம் கார்க்கி, ஷெல்லி, ஜார்ஜ்பெர்னாட்சா, பாப்லோநெருடா, பெட்ராண்டரசல் ஆகியோருடன் பாரதிதாசனை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அவர் மூடநம்பிக்கைகளையும், மிகப்பழமையான இறுக்கமான நம்பிக்கைகளையும் சாடினார். விவசாயிகளைப் பற்றியும், வறுமையைப் பற்றியும் எழுதிய அவருடைய எழுத்துகள் பாராட்டுக் குரியவை. தொழிலாளர்கள் உழைப்பு உறிஞ்சப்படு வதையும், வன்மையாகக் கண்டித்துள்ளார். இந்து சமுதாயத்தில் தடைகளாக உள்ள பிராமணீயத்தை யும் சாதியத்தையும் கட்டுடைத்தார். அதே நேரத்தில், பொதுவுடைமையையும், பகுத்தறிவுவாதத்தையும் ஊக்கப்படுத்தினார்.

பாரதிதாசன் ஒரு கவிஞர் மட்டுமல்லர், ஒரு நல்ல எழுத்தாளருங்கூட அவர் நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், திரைக் கதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். மேலும், அவர் ஒரு சிறந்த ஓவியருங்கூட! அவருடைய இயற் பெயர் கனக சுப்புரத்தினம். பாரதியாருடன் ஏற்பட்ட நெருக்கமான நட்பின் காரணமாகத் தன் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். சமூகக்கேடுகளையும், அரசின் கேடுகளையும் கண்டிக்கும் வண்ணம், பல பாடல்களை அப்பெயரில் புனைந்தார். 8.11.1946 அன்று பணி ஓய்வு பெற்றபின், புதுச்சேரி அரசியலில் ஈடுபட்டு 1954 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக ஆனார். 1960 ஆம் ஆண்டு மீண்டும் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால், அதில் தோற்றுப் போனார். 10.5.1961 ஆம் ஆண்டு தன் படைப்பு களுக்குள் சிறந்த காவியமான 'பாண்டியன் பரிசு' படைப்பைத் திரைப்படமாக்கும் எண்ணத்தோடு சென்னைக்கு வந்தார். அதற்கான மூலதனம் இன்மையால், அம்முயற்சியிலும் தோற்றார்.

தன் விலை மதிப்பற்ற ஆக்கங்களால், பாரதி தாசன் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தினார். தமிழ் இலக்கியத்தில் சமுகம் சார்ந்த கருத்துக்களை அறிமுகம் செய்த முன்னோடி ஆவார். அவருடைய பெரும்பாலான கவிதைகள், சமூக நீதிக்கருத்துக் களை பாடியமையால்தான் அவர் 'புரட்சிக்கவி' என அழைக்கப்பட்டார். தம் முன்னோர்களைவிட இவர் சிறந்தமைக்குக் காரணம். இவர் கவிதைகளில் உள்ள பகுத்தறிவுச் சிந்தனைகளே! அவருடைய தேசிய உணர்வு, தாய்மொழி மீதான பற்று முதலா னவை, பல வழித்தோன்றல் கவிஞர்களை ஈர்த்தது.

'உழைப்போர் உதிரத்து'... இப்பாடலில், பாரதிதாசன் தொழிலாளர்களின் இன்னல்களை எடுத்துரைக்கிறார். அவருடைய முதலாளித்துவ எதிர்ப்புச் சிந்தனையையும், தொழிலாளி, முதலாளி சமமாகும் சிந்தனையையும் 'ஓடப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்' என்ற பாடலில் நாம் காணலாம். பாரதிதாசனின் தாய்மொழிப்பற்று மற்ற மொழி களை புறந்தள்ளவில்லை. மொழிப்பற்று, இனப் பற்று ஆகியவற்றில் சிறப்பான இடத்தைப் பெற்று வளர்ந்தார். பாரதிதாசனின் படைப்புகளில் கொடு முடியாக விளங்கும் 'பாண்டியன் பரிசு' தமிழ் இலக்கியத்தில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. அவருடைய கலைத்திறமையைத் தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜகானின் ஆர்வத்தோடு ஒப்பிடலாம். மக்களின் மீது இருந்த அன்பைக் 'குடும்ப விளக்கில்' வெளிப்படுத்துகிறார். திருக்குறளின் ஆறாம் அதி காரத்தில் குறளின் மூலம் அக்காவியத்தை இயற்றி னார். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற குறுங் காவியமும் சிறப்பான படைப்பு.

புரட்சிக்கவி 'காதலா கடமையா', 'வீரத்தாய்', 'கடல்மேல் குமிழிகள்' ஆகியவை நகைச்சுவை சார்ந்தவை. 'எதிர்பாராத முத்தம்', 'தமிழச்சியின் கத்தி', 'சௌமியா' ஆகியவை அவருடைய துன்பியல் காவியங்கள். அவரின் 'பிசிராந்தையார்' நாடகம், சாகித்திய அகாடமி விருதைப் பெற்றது. 'குறிஞ்சித் திட்டு", 'கண்ணகி புரட்சிக்காப்பியம்', 'மணிமேகலை வெண்பா', 'தமிழியக்கம்', 'இருண்ட வீடு', 'நல்ல தீர்ப்பு', 'அமைதி', 'சேரதாண்டவம்', 'காதல் நினைவுகள்', 'கழைக்கூத்தியின் காதல்', 'அழகின் சிரிப்பு', 'இசையமுது', 'இளைஞர் இலக்கியம்', இவற் றோடு மேலும் பல அவரின் படைப்பாளுமைக்குச் சான்றுகள் ஆகும்.

'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து' போன்ற கவிதைகள் பாரதிதாசனை உலகக்கவிஞராக உயர்த்துகின்றன.

பாரதிதாசன் 79 ஆக்கங்களைத் தமிழ் இலக்கி யத்திற்கு கொடுத்துள்ளார். அந்த 79 ஆக்கங்களுள், 54 ஆக்கங்கள் கவிதை சார்ந்தவை. கவிதைகளையே அதிகம் படைத்தமையால், 'பாவேந்தர்' என அவரை அழைத்தனர். 21041964 ஆம் ஆண்டு காலை சரியாக 810 மணி அளவில், சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் காலமானார். அவரின் உடலைச் சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு ஒரு வேன் மூலம் கொண்டு சென்றனர். 2241964 அன்று அவர் உடலை அடக்கம் செய்தனர். மு. கருணாநிதி, ஈ.வி.கே.சம்பத், ம.பொ.சிவஞானம், கண்ணதாசன் போன்றோரும் மேலும் பல அரசியல் தலைவர்கள், கவிஞர், சமூகச் சீர்திருத்தவாதிகளும் அவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அவருடைய பேராத்மா மறைந்த போகத் தமிழ் இலக்கியம் தன்காலத்துப் பெருங்கவிஞரை இழந்துவிட்டது.

# சமூக சேவையில் உச்சம் தொட்ட மருத்துவர் கலா

மருத்துவர் கலாவும் அவரது கணவர் டாக்டர் செல்வகுமாரும் 1998ஆம் ஆண்டு முதல் ஹச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் பிற மருத்துவ சேவைகளையும் அளித்து வந்தனர்.

டாக்டர் கலா இதுவரை ஹச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்ட 500க்கும் மேற்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கும் சிசேரியன் செய்து, தாயையும், சேயையும் ஆரோக்கியமாக வாழ வைத்துள்ளார்.

90களில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்கள் மீது அரசு மருத்துவமனையோ தனியார் மருத்துவ மனைகளோ யாரும் பெரிதாக அக்கரை செலுத்திட வில்லை. அந்த கால கட்டங்களில் மருத்துவர் கலா அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்திருக் கிறார்.

இந்திய அளவில் எச்.ஐ.வி.தொற்று உள்ளவர் களுக்கு முதன்முதலில் அறுவை சிகிச்சை அளித்தவர் மருத்துவர் கலா.

அது மட்டும் இன்றி அந்த காலகட்டங்களில் நம்பிக்கை மையம், ஏ.ஆர்.டி.மையம் என எதுவும் இந்திய அளவில் எங்குமே இல்லை. ஆனால் மருத்து வர் கலா எயிட்ஸ் நோயாளிகளுக்கு எல்லாமுமாக இருந்தார்.

மிக சாதாரணமாக ஸ்கூட்டியில் பயணம், கிடைக்கும் இடத்தில் டீ, என மிக எளிமையான ஒரு மருத்துவராக வலம் வந்துள்ளார். பெரிய அளவில் சம்பாதிக்கும் ஆசையும் அவருக்கு இருந்ததில்லை.

இத்தனை சாதனைகளை செய்துவிட்டு அதை பெரிதாக இதுவரை வெளியில் சொல்லி விளம்பரம் தேடிக்கொண்டதில்லை. அத்தகைய சேவையாளர் திடீரென உயிரிழந்துள்ளார்.

மழை வந்ததால், நாமக்கல் தங்கம் மருத்துவ மனை சுவருக்கு பக்கம், ஒதுங்கி நின்ற மருத்துவர் கலா உள்ளிட்ட 2 பேர் மீது சுவர் இடிந்து விழுந்ததில், மரணம் என்ற செய்தியை பார்த்தவர் களுக்கு அம்மருத்துவர் பற்றி முழுமையாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

சமூக சேவையில் உச்சம் தொட்ட எளிய மருத்துவர் கலா

இந்த மருத்துவரின் உயிரிழப்பு எச்ஐவியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பேரிழப்பு.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துக்குள் வைக்கப்படும்"

என்ற தெய்வப்புலவரின் வாக்கிற்கு ஏற்ப உங்க ளால் பலன் பெற்றவர்களுக்கு நீங்கள் தெய்வமா கவே வாழ்வீர்கள் அம்மா.

**உமா மகேசுவரி**



# அன்னையர் நாள்



அன்னையர் நாள், உலகத்தில், ஒவ்வொரு ஆண்டும் மே திங்கள் இரண்டாம் ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலவுலகில் உயர்ந்த உயிர் என்று நாம் கொண்டாடுவது மனித உயிர். அதிலும் உயர்வென்று நாம் கொண் டாடுவது அன்னை யரைத்தான். உலகத்தில் உயர்ந்த, பெருமை மிக்க நாகரித்தைக் கொண்ட மக்கள் கூட்டம், தமிழர் கூட்டம் ஒன்றே தான். தமிழர்கள் தொடக்க காலங் களில் தாய்வழிச் சமூகமாகவே வாழ்ந்து வந்தார்கள் என்பது வரலாறு. தாய் என்ற இந்த ஈரெழுத் துச் சொல்லின் குணநலன்களின் உயர்வை யாராலும் விவரித்துச் சொல்லி விட முடியாது. இப்படிப் பட்ட தாய்மார்களை உலகெலாம் ஒரு நாள் நின்று நிதானித்துக் கொண்டாட, அன்னையர் நாள் என்பது ஒரு அரும் வாய்ப்பு என்றே நான் நினைக்கிறேன்.

அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா மரியா ஜீவ்ஸ் ஜர்விஸ் என்பவரின் மகள், அன்னா மேரி ஜர்விஸ். தனது அன்னை மீது கொண்ட பேரன்பின் காரணமாக, குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைக்க முயற்சிகள் மேற்கொண் டார். இந்த முயற்சியின் முன்னெடுப்பாக ‘மதர்ஸ் டே ஒர்க் கிளப்’ என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலமாக, குழந்தை வளர்ப்பு, தூய்மை, நலம், கல்வி கற்பித்தல் போன்ற பல்வேறு பயிற்சிகளை தாய்மார்களுக்கு கொடுத்து வந்தார் அன்னா மேரி ஜர்விஸ்.

அன்னா மேரி அவர்களின் அன்னை நடத்தி வந்த ஞாயிற்றுக் கிழமைப் பள்ளியில், 1876 ஆம் ஆண்டு திட்டப்படி அன்னையைப் போற்றும் விதமாக ஒரு நாள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அதற்கு ‘அன்னையர் நாள்’ என்று பெயரிடப் பட்டிருந்தது.

அன்னா மேரியின் அன்னை அன்னா மரியா ஜீவ்ஸ் ஜர்விஸ் அவர்கள் 1905ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். அன்னா மேரி, 1908 ஆம் ஆண்டு மே பத்தாம் நாள், தம் அன்னையின் ஆசையை நிறைவேற்றும் விதமாக 25 ஆண்டு களாக, அம்மா ஆசிரியையாக இருந்த மேற்கு விர்ஜினியாவின் கிராப்டன் நகரில் உள்ள ஆண்ட் ரூஸ் கோயிலுக்குச் சென்று, தமக்குத் தெரிந்த அன்னையர்களை கோயிலுக்கு அழைத்து, அவர்கள் அனைவருக்கும் பூங்கொத்துகள் பரிசாகக் கொடுத்து அனுப்பினார். இந்நிகழ்வே உலக அன்னையர் நாள் கொண்டாட்டத்திற்கு அச்சாரமாகத் திகழ்ந்தது.

அன்னையருக்கு தாம் கொடுத்த மரியாதையை உலகமெல்லாம் இருக்கும் மக்கள் தர வேண்டும் என்பதற்காக அன்னையர் நாள் என்று ஒரு நாளை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி

போராட்டங்கள் நடத்தினார் அன்னா மேரி அவர்கள். இந்தப் போராட்டங்களின் பயனாக, 1914ஆம் ஆண்டு, மே ஒன்பதாம் நாள், அமெரிக்காவின் 28வது அதிபரான தாமஸ் உட்ரோ வில்சன் அவர்கள், அன்னையர் நாளுக்கான அறிவிப்பில் கையெழுத்திட்டார். இந்தக் கையெழுத்தின் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் மே திங்கள் இரண்டாம் ஞாயற்றுக் கிழமை அன்னையர் நாளாக கொண்டாடப்படும் என்று அமெரிக்க அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.



இந்த அறிவிப்பை அமெரிக்க காங்கிரஸ் முதலில் ஏற்றது. பினனர் கனடா நாடு ஏற்றுக் கொண்டது. அதன்பின் 46 நாடுகள் அதே நாளில் அன்னையர் நாள் கொண்டாடப்படும் என்று அறிவித்தன. இன்று உலகம் முழுவதும் அன்னையர் நாள் கொண்டாடப்படுகிறது. அன்னா ஜார்விஸ் அவர்களின் முயற்சியால் உலகமெல்லாம் அன்னை யர் நாள் கொண்டாடப்படுகிறது என்றாலும் அன்னா ஜார்விஸ் திருமணம் செய்து கொள்ள வில்லை. குழந்தை பெற்றுக் கொள்ளாதவர். தாம் அன்னையாகா விட்டாலும் உலகில் வாழும் அன்னையர்களுக்காக அரும்பாடுபட்டவர். அன்னையர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதும், அவர்களுக்கு மரியாதை தரப்பட வேண்டும் என்பதும் தொடர் நிகழ்வாக நடந்தேறி வருகிறது.

அன்னையர் நாள் என்ற ஒரு நாளை அன்னா ஜார்விஸ் அவர்கள் அறிமுகப்படுத்தினாலும், அவரது மகள் அன்னா மேரியின் அன்பாலும், முயற்சியாலும், போராட்டங்களாலும் உலக மக்கள் அன்னையர் நாள் கொண்டாடுகிறார்கள் என்பதே உண்மை.

அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக அன்னையர் நாளை அறிவித்ததற்குப் பின், ஒன்பது ஆண்டுகள் கழித்து, அமெரிக்க ஒன்றிய விடுமுறை நாளின் வணிகமயமாக்கல் மிகவும் மலிவாகிப் போனது. இந்த நிலைக்கு அன்னா ஜார்விஸ் அவர்களே எதிர்ப்பாளராக மாறினார். அன்னையர் நாள் கொண்டாட்டத்திற்கு எதிராக நடப்பவைகளைக் களைந்திட தனது செல்வங்களையும் வாழ்நாட் களையும் பயன்படுத்திப் போராடினார். அன்னையர் நாள் அறிவிக்கப்பட்டதில் இருந்து அந்த நாள் வணிகமயமாக்கப்பட்டுவிட்டது. இதை, அன்னா ஜார்விஸ் அவர்களும், இக்கருத்தை ஆதரித்தோரும் அதை 'ஹால்மார்க் விடுமுறை நாள்' என்று கருத்துகளைத் தெரிவித்தனர்.

அன்னையர் நாள் பயன்பாட்டின் அடிப்படை யில் தோன்றிய வணிக செயல்பாடுகள் அவருக்கு சினமூட்டியது. ஆகவே, தனது கருத்தை அனை வரும் அறிந்து கொள்ளும்படி வெளியிட்டு வந்தார். தனிப்பட்ட முறையில் கடிதங்கள் எழுத, வாழ்த்துகளை எழுத சோம்பேறித்தனப்பட்டுக் கொண்டு வாழ்த்து அட்டைகளை வாங்கும் நடை முறையை கண்டித்தார். ஆனால், இந்நாட்களில் வாழ்த்து அட்டைகளும் வழக்கொழிந்து அறிவியல் வளர்ச்சியல் கண்டுபிடிக்கப்பட்ட தொடர்புக் கருவிகளின் மூலமாக வாழ்த்துகள் அனுப்பும் இயந்திரத்தனமான நிலை வந்துவிட்டது.

1948ஆம் ஆண்டு, அன்னையர் நாளில், வணிகமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியைச் சீர்குலைத்தார் என்று, அரசு, அன்னா மேரி ஜார்விஸ் அவர்களைக் கைது செய்தது. அப்போதுதான் அன்னா மேரி ஜார்விஸ் அவர்கள் "அன்னையர் நாள் இதுபோல் நடத்தப்படும் என்று தெரிந்திருந்தால் நான் இந்த நாளை தொடங்கி யிருக்கவே மாட்டேன், ஏனெனில், இது கட்டுப் பாடின்றி சென்றுவிட்டது" என்று கூறினார்.

வணிகம் சார்ந்து மிகவும் வெற்றி பெற்ற அமெரிக்க நிகழ்ச்சிகளில் ஒன்றாக, அன்னையர் நாள் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. தேசிய உணவு விடுதிகளின் கூட்டமைப்பின் கணிப்பு இவ்வாறு கூறுகிறது. அன்னையர் நாள்,

இப்பொழுது அமெரிக்காவின் உணவு விடுதிகளில் இரவு விருந்துக்கு ஆண்டின் மிகவும் புகழ்பெற்ற நாளாக இருந்து வருகிறது. எடுத்துக்காட்டாக ஐபிஐஎஸ் வேர்ல்ட் என்ற வணிக ஆராய்ச்சி வெளியீட்டு நிறுவனத்தின் கணிப்பின்படி, அமெரிக்கர்கள் அன்னையர் நாள் கொண்டாட்டத் திற்கு மலர்களுக்காக 2.6 பில்லியன் டாலர்களும், ஸ்பா சிகிச்சைகளுக்கும், பரிசுப் பொருட்களுக்கு மாக 1.53 பில்லியன் டாலர்களும், வாழ்த்து அட்டைகளுக்கு 68 மில்லியன் டாலர்களும் செலவு செய்கின்றனராம்.

அன்னையர் நாள் என்பது குடும்பங்களில் உள்ள உறவுகள் மேன்மைப்பட வேண்டும் என்பதோடு சமுதாயத்தில் அன்னையர்களுக்கான மதிப்பீடு உயர்நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தோற்றுவிக்கப்பட்டது.

ஐரோப்பாக் கண்டத்தில் வாழ்கின்ற மக்கள் பல மரபுகளை பின்பற்றி வருகின்றனர். அம்மரபுகளில் ஒன்றாக அன்னையர் நாளும் இருந்ததாக அறிய முடிகிறது. குறிப்பிட்ட ஒரு ஞாயிற்றுக் கிழமையை அன்னையருக்காக தேர்ந்தெடுத்து வைத்திருந்தனர். இந்நாளை தாய் ஞாயிறு, என்றும், அன்று நடைபெறும் கொண்டாட்டங்கள் அனைத்தையும் தாய் ஞாயிறு கொண்டாட்டங்கள் என்றும் மகிழ்வுடன் அழைத்து வந்திருக்கின்றனர்.

ஆங்கிலிக்கர்கள் உட்பட கிறித்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில், அன்னையர் நாள் நாட்காட்டியில் இடம் பெற்றிருக்கிறது. கத்தோலிக்க நாட்காட்டியானது அதனை லயேட்டர் ஞாயிறு என்று குறிப்பிடு கின்றது.

கன்னி மேரி மாதாவிற்கும் மாதா தேவாலயத் திற்கும் மரியாதை செலுத்தும் விதமாக லெண்டில் நான்காவது ஞாயிறு கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் அன்னையருக்கு பரிசுகளை தருவது, சமைப்பது, சுத்தம் செய்வது போன்ற, பெண்கள் காலம் காலமாகச் செய்யும் வேலைகளை, மற்றவர்கள் செய்து, அன்னையரை மகிழ்ச்சிப் படுத் துவது என்பது, தொடர்ந்து வழிவழியாக நடந்தேறி வருகிறது.

ரோம் நாட்டில், மேட்ரோனலியா என்ற விடுமுறை நாள் கடைபிடிக்கப்பட்டது. அது ரோமர்களின் ஜூனோவுக்காக என்று இருந்தது. அந்த நாளில் அன்னையர்களுக்கு பரிசுப் பொருட் களை வழங்கி அவர்களை மகிழ்வித் திருக்கிறார்கள் பழங்கால ரோமர்கள்.

பண்டைய கிரேக்க மக்கள் லாம்பர்ட்ஸ் என்ற நாளை கொண்டாடி வந்தனர். அந்த நாள் அன்னை யர்களை வழிபடும் மரபில் இருந்து வந்ததாக கூறிக் கொள்கின்றனர். இந்த நாள் கிரேக்க கடவுள்களின் தாயாக கிரேக்கர்கள் கருதும் சைபெலேக்குக்கு நடத்தப்படும் விழா என்று சொல்லப்படுகிறது. இந்த விழா ஆசியா மைனரில் சமஇரவு நாள் என்றும், ரோம் நாட்டில் மார்ச் 15ஆம் நாளில் இருந்து மார்ச் 18ஆம் நாள் வரை கொண்டாடப்படுகிறது என்கிறார்கள்.

கிரீஸ் நாட்டில் உள்ள கோயில்களின் தாய்மை யைப் போற்றும் விதமாகவும், பெருமைப்படுத்தும் விதமாகவும் வழிபாடுகள் நடந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆலயத்தில் இயேசுவின் வரலாற்று நிகழ்வுகளும் மக்கள் பார்வைக்கு கொண்டு வரப்பட்டன. இந்நிகழ்வு திருவிழா வாகவே கொண்டாடப்பட்டது. இத்திருவிழா நாளில் தியோடோகோஸ் அதாவது கடவுளின் தாய் அன்னை மரியாள் தோன்றியதிலிருந்து ஜெரு சலேமிலுள்ள கோயிலுக்கு இயேசு கிறித்துவை கொண்டு வருவது வரையில், இந்தத் திருவிழா வானது அன்னையர் தொடர்புடையதாக விளங் கியது.

சில கத்தோலிக்க நாடுகள் அன்னை மேரி பிறந்த நாளை அன்னையர் நாளாகவும், சில முகம்மதிய நாடுகள் முகம்மது நபி அவர்களின் மகள் பாத்தி மாவின் பிறந்தநாளை அன்னையர் நாளாகவும் கொண்டாடி வருகின்றனர். ஈரான் நாட்டில் ஜூமாடா அல்தானியில் அவ்வாறே கொண்டாடப் பட்டது. பின்னாட்களில் இது ஈரானியப் புரட்சி நாளாக மாறியது. இப்படி மாற்றியமைக்கப் பட்டதற்கு காரணமாக, பெண்ணிய நடவடிக்கை களைக் குறைத்து குடும்பத்தின் பாரம்பரிய மாதிரிகளுக்கான முன் மாதிரியை கொண்டு வருவதாக கருத்துச் சொல்லப்பட்டது. இது ஈரானிய நாட்டிகாட்டியில் ஷா சகாப்தத்தில் 25 அசாராக இருந்தது.

ஜப்பான் நாட்டைப் பொறுத்தவரை பேரரசர் அக்கிஹிட்டோவின் தாய் பேரரசி கோஜூன்வின் பிறந்த நாள் அன்னையர் நாளாக கொண்டாடப் பட்டது. அந்த நாளில் கார்னேஷன், ரோஜா மலர்களை பரிசாக அளித்து அன்னையர் நாளைக் கொண்டாடுகின்றனர்.

பொலிவியா நாட்டில் 1812ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் தற்போது கொக்ஹபம்பா என்றழைக்கப்படும் நகரில் நடைபெற்ற போரில், விடுதலைக்காக போராடிய பொலிவியா பெண்கள், ஸ்பானிஷ் படையினரால் துன்புறுத்தப்பட்டனர்.

துன்புற்ற அவ்வீரப் பெண்களை போற்றும் விதமாக அன்னையர் தினம் அங்கு கொண்டாடப்பட்ட தாகவும் சொல்லப்படுகிறது.

பல நாடுகளில் தாய்மையைப் போற்றும் கொண்டாட்டங்கள் நடந்து வந்து கொண்டே இருக்கின்றன. அந்தக் கொண்டாட்டங்களின் நீட்சியாகவும், ஒருமையாகவும் சில நிகழ்வுகள், அமெரிக்க ஒன்றியத்தின் அன்னையர் நாள் அறிவிப்பால் தற்போது நடந்தேறி வருகின்றன. அவை, தங்களைப் பெற்ற அன்னைக்கு பிள்ளைகள் கார்னேஷன் மலர்களையும் பரிசுப் பொருட்களை யும் வழங்குதல் போன்றதாகும்.

சில நாடுகளில் முற்றிலும் மாறுபட்ட நிகழ்வு களும் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அதி லொன்று, குழந்தை பெற்ற அன்னையர், அன்னையர் நாளைக் கொண்டாடவில்லை என்றால் அது குற்றம் என்ற நடைமுறை இருந்ததாக அறிய முடி கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மே திங்கள் இரண்டாம் ஞாயிறு அன்று வங்காளதேசத்தில் அன்னையர் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் அரசு, அரசு சாராத அமைப்புகளும் பல நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. வங்க தேச சமூகத்தில் அன்னை யர்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ரத்னகர்வாமா என்ற விருதை சிறந்த அன்னையர்களுக்கு வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். சில அன்னை யர்கள் தங்களது பிள்ளைகள் பின்னாட்களில் சிறந்த மனிதர்களாக வரக்கூடிய அளவில் வளர்க்க வேண்டும் என்பதற்காக கிராண்ட் ஆசாத் ஹோட் டல் விருதுகளைக் கொடுக்கிறது. அன்னையர் நாளை கொண்டாடும் முகத்தான் வரவேற்பு நிகழ்ச்சிகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படு கின்றன. தொலைக்காட்சிகள் அனைத்திலும் சிறப்பு நிகழ்வுகள் ஒளிபரப்பாகின்றன. அன்னையின் சிறப்பை பிள்ளைகள் புரிந்து கொள்ளும் விதமாக வாழ்த்து அட்டைகளும் பரிசுப் பொருட்களும் சந்தைப்படுத்தப் படுகின்றன.

1997ஆம் ஆண்டில், சீனாவின் மேற்குப் பகுதி யில் வாழ்ந்து வந்த ஏழை அன்னையர்களுக்கு உதவும் நாளாக அன்னையர் நாள் கொண்டாடப் பட்டது. அந்நாட்டின் பொதுவுடைமை இதழான பீப்பிள்ஸ் டெய்லியில் ஒரு கட்டுரை வெளியிடப் பட்டிருந்தது. அதில், 'அன்னையர் நாள் அமெரிக் காவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும், சீனாவிலுள்ள மக்கள் எந்தவித தயக்கமுமின்றி கொண்டாடுகின்றனர். காரணம், இது சீன நாட்டின் பாரம்பரிய நன்னெறிகளுடன் ஒத்துப் போவதாலும், பெற்றோருக்கு, மூத்தோருக்கு, மகளுக்குரிய பற்றுடன் மரியாதை செய்கின்றது. சீனாவின் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர் ஹங்கியூ, மேங்க் ஸீயின் தாயான மேங்க் மூ அவர்களின் நினைவாக அன்னையர் நாளை அதிகாரப்பூர்வ மாக ஏற்குமாறு பரிந்துரைத்தார். அவர் சீன அன்னையர் திருவிழா ஊக்குவிப்பு அமைப்பு என்று அழைக்கப்பட்ட ஒரு அரசு சாரா அமைப்பை நூறு கன்ஃபியூச அறிஞர்கள், நன்னெறியாளர்கள், விரிவிரையாளர்கள் ஆதரவுடன் உருவாக்கினார். மேற்கத்திய கார்னேஷன் மலர்களைப் பரிசாகக் கொடுப்பதை விடுத்து சீன அன்னையகளால் வளர்க்கப்பட்ட லில்லி மலர்களை அன்னையருக்கு பரிசகாக் கொடுக்கும்படியும் கூறினார்.

மெக்சிகோவில் தியா டே லாஸ் மாட்ரேஸ் என்ற பெயரில் அன்னையர் நாள் கொண்டாடப் படுகிறது.

தாய்லாந்து நாட்டில் அந்நாட்டின் அரசியாகிய ஸ்ரீகிட் பிறந்த நாளான ஆகஸ்ட் 12ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. தந்தையர் நாள் அரசன் பிறந்த நாளில் கொண்டாடப்படுகின்றது.


வியட்னாமில் அன்னையர் நாள் லே வூ லான் என்று அழைக்கப்படுகின்றது. அது லூனார் நாட்காட்டியில் ஏழாவது மாதத்தின் பதினைந் தாவது நாளில் கொண்டாடப்படுகிறது. வாழ்ந்து கொண்டிருக்கிற அன்னையர்களுக்கு அவர்களது பிள்ளைகள் நன்றி செலுத்துவர். தாயை இழந்த பிள்ளைகள் இறந்த தாயின் ஆன்மாவிற்காகப் வேண்டுதல் செய்து கொள்ளும் பழக்கம் தொடர்ந்து வருகிறது.

அன்னையர் நாள் உலக நாடுகள் பலவற்றிலும் தங்களுக்கேற்றபடிகொண்டாடப்படுகிறது. எப்படிக் கொண்டாடினாலும் அன்னையர் நாள் என்பது கொண்டாடப்பட வேண்டிய நாள் என்பது, இவ்வுலகில் அன்னையாக இருக்கிற அத்தனை பேரும் கொண்டாடப்பட தகுதி பெற்றவர்கள் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்துக்கும் இட மில்லை. ஆண் ஒரு முறை பிறக்கிறான், ஒரு முறை இறக்கிறான், ஆனால், பெண்கள் பிறந்து, இறந்து, பின் பிறந்து இறக்கி றார்கள் என்பதே உண்மை.

தாயிற் சிறந்த கோவிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பார்கள். நம்மைப் பொறுத்தவரை தாயிற் சிறந்த உயிர்களே இல்லை.

அன்னையர்கள்அனைவரையும் வணங்குவோம்.

விசவனூர் **வே. தளபதி**










என்.கோபாலசாமி ஐயங்கார்



அல்லாடி கிருஷ்ணமூர்த்தி



டி.டி. கிருஷ்ணமாச்சாரி



சர் பெனகல் நர்சிங் ராவ்



அரசியல் சாசன வரைவுக் குழு

# சட்ட மேதை அம்பேத்கர்

*இந்திய அரசியல் சட்ட வடிவமைப்பை உருவாக்க என்னையும் சேர்த்து அம்பேத்கர் தலைமையில் எழுவரை நியமித்தார்கள். உண்மையில் அந்த சமயத்தில் நடந்தது என்னவென்றால் குழு நியமிக்கப்பட்ட சிறிது காலத்திலேயே ஒருவர் இறந்துவிட்டார். இரண்டு பேருக்கு வெளிநாட்டு குடியுரிமை கிடைத்து விட்ட காரணத்தினால் அமெரிக்காவுக்கு பறந்துவிட்டார்கள். மேலும் 2 பேர் குழுவில் பணியாற்றாமல் படைகளுக்கு உதவியாக மாநில இணைப்பு குழுவில் பணியாற்றச் சென்றுவிட்டனர். மீதமிருந்தது திரு. அம்பேத்கர் அவர்களும் நானும் தான்.*

*என் மனசாட்சியின் படி சொல்லுகிறேன் அரசியலமைப்பு தொடர்பாக கூட்டப்பட்ட எந்த ஒரு கூட்டத்திலும் நான் பங்கேற்றதில்லை. அதற்காக நான் பணியாற்றவும் இல்லை.*

*உண்மையை சொல்லப்போனால், இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர் திரு. அம்பேத்கர் மட்டும்தான் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*நாடாளுமன்றத்தில் திரு. அல்லாடி கிருஷ்ண மூர்த்தி.*



# பார்ப்பனர்களை புரோகிதத்திற்காக அழைக்காதீர் என்று சொன்னவர்

## லாலுபிரசாத் யாதவ்

ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவரும், மேனாள் பீகார் மாநில முதலமைச்சரும், மேனாள் மத்திய இரயில்வேதுறை அமைச்சராகவிருந்து அத்துறையை இலாபகரமாக நடத்திக்காட்டி சாதனை புரிந்த வருமான லாலுபிரசாத் யாதவ் அவர்கள் பற்றி செய்தி வெளியிட்ட தினமலர் என்னும் ஏட்டில் (23.04.2019) அவரைக் குறிப்பிடும் பொழுது சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறான், சிகிச்சை பெற்று வருகிறான் என்று ஒருமையில் அவன், இவன் என்று எழுதியுள்ளது.

சிறைக்குச் சென்றதால் தான் அப்படி எழுத நேர்ந்தது என்றால், காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரரையும் அப்படி எழுத லாமா? எழுதக்கூடாது என்பதுதான் நம் கருத்து.

லாலுமீது அப்படி என்ன சீற்றம்? பீகார் முதல மைச்சராக இருந்தபோது பார்ப்பனர்களை புரோகி தத்திற்காக அழைக்காதீர் என்று சொன்னவர்.

மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட போது, அவரின் கன்னிப்பேச்சில் அவர் உதிர்த்தவை உயர்ஜாதிப் பார்ப்பனர்களின் கண்களில் உஷ்ணத்தை ஏற்படுத்தியது.

அவர் பேச்சில் உயர்ஜாதிக்காரர்கள் குறுக்கிட் டுத் தொல்லை கொடுத்தனர். அதற்கு லாலு பதிலடி எப்படி கொடுத்தார் தெரியுமா? (அவர் கையில் கைத்தடி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது).

சவப்பெட்டி திருடர்களே! அமைதியாக இருங்கள். உங்களின் பெருமையைத் தீயில் போடத்தான் வந்திருக்கிறேன். குஜராத் பிரச்னையின் நோயின் வேரைக் கண்டறிந்து அழிக்காவிட்டால், நோய்க்கு மருந்தேயில்லாமல் போய்விடும்“ என்ற போது மேனாள் காவல்துறை அதிகாரியும் பிஜேபி சார்பில் மாநிலங்களவை உறுப்பினருமான சிங்கால் மேலும் குறுக்கிட்டார்.

மாநிலங்களவையில் அறிவு ஜீவிகள்தான் இருக்க வேண்டும், உங்களைப் போன்றவர்கள் எல்லாம் காவல்துறை வேலைக்குப் போகவேண்டும் என்று அடி கொடுத்தார்.

தன் உரையை முடிக்கும்பொழுது நான் இந்த அவையில் அமர்ந்து இருக்கும் வரை யாரும் நாட்டை இந்துத்துவா நாடாக மாற்றிவிட முடியாது“ என்று அறைந்தார்.


அந்தக் கோபம்தான் இந்தத் தினமலர் பூணூல் கூட்டத்துக்கு லாலுபிரசாத் முதலமைச்சராக இருந்தபோது அவர் ஜாதியைக் குறிக்கும் வகையில் மாடு கறப்பதுபோல கார்ட்டூன் போட்டது இந்தியன் எக்ஸ்பிரஸ் என்பதும் நினைவிருக் கட்டும்.

இவர்கள்லாலுவைக்கேலி செய்வார்கள் அவர் தான் ஹார்வர்டு பல்கலைக்கழகத்துக்கு அழைக்கப் பட்டு அங்கு பொருளாதாரம், நிர்வாகம் பற்றிப் பேசினார் என்பதையும் நினை வூட்டுகிறோம்.

**- மயிலாடன்**

# புற்றுநோய் "கேன்சர் இல்லா உலகம்"

## (World without Cancer)



உங்களால் நம்ப முடியாது. ஒரு அதிர்ச்சியான உண்மை என்னவென்றால் புற்றுநோய் என்பது நோய் அல்ல வியாபாரம்.

புற்றுநோய் என்பது இன்று பரவி வரும் கொடிய நோய் மட்டுமின்றி குழந்தைகள், சிறார்கள், பெரிய வர்கள் என அனைவரிடமும் பாரபட்சம் பார்க்காமல் பற்றிக் கொள்ளும் கொடிய நோய் ஆகும். இந்தப் பதிவை நீங்கள் மற்ற வர்களுடன் பகிர்வதன் மூலம் இந்த மோசமான வியா பாரத்தை உலகம் முழு வதும் செய்பவர்களையும் தடுத்த நிறுத்தலாம்.

"கேன்சர் இல்லா உலகம்" (WORLD WITHOUT CANCER) எனும் புத்தகம் உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும். இன்றும் உலகம் முழுவதும் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதற்கு தடுக்கப்படுவதும், தடுக்கப்படுவதற்கு உண்டான காரண மும் உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்.

இதுவரை தெரியாத ஒரு வியாபார தந்திர உண்மையை தயவுசெய்து தெரிந்து கொள்ளுங்கள், கேன்சர் என்பது நோய் அல்ல. அது வைட்டமின் பி 17 ன் குறைபாடு.

இதற்காக கீமோதெரபி, அறுவை சிகிச்சை மற்றும் பக்க விளைவுகள் தரும் மருந்தை தயவு செய்து எடுத்துக் கொள்ள வேண்டாம்.

கடந்த காலத்தில் ஸ்கர்வி (Scurvy) எனும் ஒரு கொடிய நோய் கடல்வாழ் மக்களை கொத்துக் கொத்தாக கொன்று குவித்தது. ஆனால், பிறகு ஸ்கர்வி என்பது நோய் அல்ல. வைட்டமின் சின் குறைபாடு என்பது தெரிய வந்தது.

கேன்சர் என்பதும் இதுபோன்றதே. நோய் அல்ல வைட்டமின் பி 17 குறைபாடு என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன். மனித குலத்திற்கு தீங்கு விளைவிக்கும் சிலர் இதை வியாபாரம் ஆக்கி பில்லியன் இல் புரளுகின்றனர்.

இனி இந்த கேன்சர் நோயிலிருந்து விடுபடும் வழிமுறைகளைப் பார்க்கலாம்.

நீங்கள் கேன்சரால் பாதிக்கப்பட்டவரா? முதலில் அது எந்த வகை என்பதை உறுதிபடுத்திக் கொள்ளவும். பயம் கொள்ள வேண்டாம்.

தினமும் 15 முதல் 20 ஆப்ரிகாட் பழத்தை உண்டு வந்தாலே போதுமானது. இதில் வைட்டமின் பி17 நிறைந்துள்ளது.

கேன்சர் குறைபாடு நீங்க, உண்ண வேண்டிய உணவுகள்:

1. காய்கறிகள்  பீன்ஸ், சோளம், லீமா பீன்ஸ், பச்சைப் பட்டாணி, பூசணி.

2. பருப்பு வகைகள்  லென்டில் (மைசூர் பருப்பு என சொல்வார்கள்) முளை கட்டியது. பிட்டர் ஆல்மண்ட் மற்றும் இந்தியன் அல்மோன்ட் (பாதம் பருப்பு), இதில் இயற்கையாகவே வைட்டமின் பி17 நிறைந்துள்ளது.

3. பழங்கள் முசுக்கொட்டைப் பழம் (Mullberries) இல் கருப்பு முசுக்கொட்டை, புளூபெர்ரி, ராஸ்பெர்ரி, ஸ்ட்ராபெர்ரி.

4. விதைகள்  எள் (வெள்ளை கருப்பு), ஆளி விதை

5. அரிசி வகைகள்  பார்லி அரிசி, பழுப்பு அரிசி (Brown Rice)

6. தானியங்கள்  கம்பு, குதிரைவாலி.

**கேன்சர் உணவுகள் ஒரு பட்டியல் :**

அப்ரிகாட்டி, லிமா பீன்ஸ், ஃபாவா பீன்ஸ் (Fava Beans) , கோதுமை புல் (Wheat Grass) , பாதாம், ராஸ்பெரிஸ், ஸ்ட்ராபெர்ரி, ப்ளாக்பெரி, பக் வீட் சோளம் (Buck Wheat), பார்லி, குதிரைவாலி, முந்திரி, மெகடாமியா கொட்டைகள் (Macadamia Nuts), முளைகட்டிய பீன்ஸ் இவை அனைத்தும் பி 17 நிறைந்த உணவுகள். இதை கவனிக்க வேண்டிய மிக அபாயகரமான விசயம் என்னவென்றால் நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் Handwash liquid. Dish wash liquid இல் அதிகளவு கேன்சர் ஐ ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் உள்ளது.

நாம் இதை பயன்படுத்தும் பொழுது இது நம் கைகளிலோ, உணவு தட்டுகளிலோ படிந்து விடுகிறது. இது 100 முறை கழுவினாலும் சுலபத்தில் நீங்குவதில்லை. மேலும் நாம் உணவை சூடாக பரிமாறும் பொழுது இது உணவின் வெப்பத்தால் அதனுடன் கலந்து உடம்பிற்குள் சென்று புற்று நோயை உண்டாக்குகிறது. அதுமட்டுமின்றி நாம் உண்ணும் காய்கறிகளில் கூட புற்றுநோயை உண்டாக்கக் கூடிய ரசாயனம் கலந்திருப்பதை நாம் பலரும் அறிவோம். என்னதான் நாம் 100 முறை கழுவினாலும் தோல் மற்றும் தோலின் உட்புறங்களில் ரசாயன கிருமிகள் பரவிவிடும். அதற்குச் சிறந்த வழி, நீங்கள் தினமும் சமையலுக்குப் பயன்படுத்தும் காய்கறிகளை ஆண்டு 365 நாளும் மஞ்சள், உப்பு நீரில் ஊறவைத்த பிறகு கழுவிப் பயன்படுத்துங்கள்.

நன்றி: ஜிசிசி DIGEST

## அன்பு மட்டுமே வாழ வைக்கும்....


மனிதனை மனிதனே கொல்லலாமா
மிருக புத்திக்கு மாறலாமா
ஆலயத்தில் குண்டு வைக்கலாமா
மனித உடலை சிதற வைக்கலாமா
ஆண்டவரின் அன்பைத் தேடும் இடத்தில்
மனிதர்களை அழிக்கலாமா
குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை
கொன்று குவிக்கலாமா

நீயும் மனித இனம்தானே
பாதை மாறியது ஏனோ
மனிதா மனிதா உன் மனம்
கொடுமைக்காரனாய் மாற்றியதோ
தீவிரவாதம்
அன்பைத் தேடும் உலகிலே
குண்டுடன் திரிவது நியாயமா
நித்தம் நித்தம் உயிர்ப் பறிப்பு
பரிதவிக்கும் உயிர்த்துடிப்பு
பயங்கொள்ள வைக்கும் சம்பவங்கள்
உயிரைப் பலி வாங்குவது ஏனோ

உயிர் எடுக்கும் மனிதா
உயிரை எடுப்பதை நிறுத்து
கொல்வதை நிறுத்திக் கொள்
பயங்கரவாதம் பயன் தராது
அன்பு மட்டுமே வாழ வைக்கும்.

வாணியம்பாடி தியாகராஜன்.
99620 82032.

# "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார்" அருமையான ஆறு பதில்கள்.



**1. கேள்வி : திராவிடர்கள் யார்?**

பதில்: திராவிடர்கள் என்போர் தெலுங்கர்கள். தமிழர் அல்ல. ஆந்திரம், கலிங்கம், தெலுங்கானம் ஆகிய மூன்று தெலுங்கு நாடுகளில் வாழ்ந்தவர்களான திரிவடுகர்களே திராவிடர்கள்.

**2. கேள்வி : திராவிடர் என்ற சொல்லைத் தமிழர்களுக்குப் பயன்படுத்துவது பொருந்துமா?**

பதில் : பொருந்தாது. 1875ஆம் ஆண்டிற்கு முன் திராவிடர் என்ற சொல் தெலுங்கர்களை மட்டுமே குறித்து வந்தது. அந்த ஆண்டில் கால்டுவெல் என்ற வெள்ளைக்காரர் தான் எழுதிய புத்தகத்தில் அதுவரை ஆந்திரர்களை மட்டுமே குறிப்பிட்டு வந்த "திராவிடர்" என்ற சொல்லைத் தமிழர்களைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்து அதன்படியும் எழுதினார். அவர் கையாண்டது தவறான கருத்து. ஏனென்றால் முன் காலத்தில் இருந்து மூன்று தெலுங்கு நாடுகளைத் தான் திரிவடுகம் என்றும், திராவிடம் என்றும் வடவர்கள் சொல்லி வந்தார்கள். திரிவடுகர் நாட்டிற்குத் தெற்கே வாழ்ந்து வந்த தமிழர்களுக்கும் இந்த சொல் பொருந்தும் என்று கால்டுவெல் எழுதியது தவறான கண்ணோட்டம். அவரைப் பின்பற்றி தமிழர்கள் என்று குறிப்பிடுவதற்கு திராவிடர் என்ற சொல்லைப் பயன்படுத்தியதும் தவறாகும். தமிழன் தன்னைத் திராவிடன் அதாவது திரிவடுகன் அல்லது தெலுங்கன் என்று சொல்வது இழிவாகும். திராவிடன் என்பது தமிழ்ச்சொல் அல்ல. வடவர்கள் தெலுங்கர்களுக்கு இட்ட பெயர் அது.

**3. கேள்வி : திராவிடம் என்று பழந்தமிழ் இலக்கியத்தில் இருக்கிறதா?**

பதில் : எந்தத் தமிழ் இலக்கியத்திலும் திராவிடம் என்ற சொல் கிடையவே கிடையாது. அந்தச் சொல்லை முதன்முதலில் பயன்படுத்திய கால்டுவெல் என்கிற வெள்ளைக்காரர் வடமொழியிலிருந்து தான் திராவிடம் என்ற சொல்லைக் கண்டு பிடித்தாகக் கூறியிருக்கிறார்.

**4. கேள்வி : பேராசிரியர் சுந்தரம் பிள்ளை திராவிட நற்றிரு நாடு என்று குறிப்பிட்டு இருக்கிறாரே?**

பதில் தெலுங்கர்களைக் குறிக்கும் "திராவிடம்" என்ற சொல்லைத் தான் நான் கையாண்டேன் என்று கால்டுவெல் என்னும் வெள்ளைக்காரர் எழுதியுள்ளார். அதற்குப் பிறகு சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணியம் இன்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாகும்.

**5. கேள்வி : இலக்கியம், சரித்திரம், ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள திராவிட நாட்டைத் தாங்கள் மறுப்பது ஏன்?**

பதில் : தமிழ்ப்புலவர்கள் எழுதிய எந்த இலக்கியத்திலும் திராவிடன், திராவிட நாடு என்ற சொற்களே இல்லை. மிக அண்மைக் காலத்தில் அந்நியர்களால் எழுதப்பட்ட நூல்களில் தான் திராவிடம் என்ற சொல் காணப்படுகிறது.

**6. கேள்வி : தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் தமிழிலிருந்து பிரிந்த மொழிகள் என்பதால் இந்த நான்கு மொழி பேசுபவர்களும் ஏன் இதன் வழி ஒன்றுபடக்கூடாது?**

பதில் : கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய இனம் தமிழினம். தமிழ்மொழி தான் உலகில் தோன்றிய முதல் மொழி, எனவே லத்தீன் ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழிகள் உட்பட எல்லா மொழிகளுமே தமிழிலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும். அதனால் உலகம் முழுவதும் ஒரே நாடாக இருக்க வேண்டும் என்று யாராவது கூறுவார்களா?

ஒரு மொழி ஒரு நாடு என்பது தான் உலக நியதி.

சிவபாரதி எழுதிய "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார்" நூலிலிருந்து..

# கஜா புயலும்
# வடக்கு சென்டினால் தீவுவாசிகளும்

இந்த கஜா புயல் பேரிடரில் களமிறங்கி பணியாற்றிய போது கற்றுக்கொண்ட பாடங்களை வைத்து தான் இனி எமது எதிர்காலத்தினை வடிவமைக்க வேண்டும் என தெளிவாகப் புரிந்து கொண்டேன். காரணம் பேரிடர்களின்போது நமது நகரங்களும், கிராமங்களும் ஒரே மாதிரி குடிக்க நீருக்கும், உண்ண உணவுக்கும் பசியால் ஆலாய்ப் பறக்க வேண்டியதைக் காண நேர்ந்தது. முழுமை யான நாகரிக வளர்ச்சியடைந்து விட்டோம் என கூவும் நம்மால் ஏன் இவற்றை எளிதாக சமாளிக்க இயலவில்லை?

ஆனால், எந்த நவீனத் தொடர்பும் இன்றி ஏறத்தாழ 60, 000 ஆண்டுகளாக வெறும் 7க்கு 7.8 கிலோமீட்டர் அளவுள்ள ஒரு குட்டித் தீவான வடக்கு சென்டினாலில் உள்ள மக்களால் எப்படி வாழ முடிகின்றது? ஆனால், பரந்து விரிந்த பூமியில் நாம் வாழப் போராடுகின்றோம். அவர்கள் தமக் கான குடிநீரை எப்படிப் பெறுகின்றார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் தமக்கான உணவினை அம்மண்ணிலிருந்து பெற இயலு கின்றது என்பது மட்டும் நிஜம். கடலில் இருந்து மீன்களைப் பெற்றாலும் தாவர உணவுகளை அந்தத் தீவில் இருந்துதான் பெற்றாக வேண்டும். படகில் போய் பக்கத்துத் தீவில் உணவு தேடுபவர்களாக அவர்கள் இல்லை.

அந்தத் தீவின் படங்களைப் பார்க்கும்போது அப்பகுதியே பசுமையாக இருப்பது தெரிய வருகின்றது. நம்மைப் போல் முழுக்க கான்கிரீட் காடுகள் அங்கே இல்லை. அவர்களின் வீட்டின் அருகாமையில் அவர்களுக்கான உணவானது கிடைக்க வாய்ப்பு அதிகம். அந்த உணவுக்கான அட்சய பாத்திரத்தினை வெளியார் எவராவது வந்து அழித்து விடுவார்கள் என்ற பயத்தில்தான் அந்தத் தீவில் வெளியார் எவரையும் அனுமதிக்க மறுக்கிறார்கள். அவர்களுக்கு தேங்காய்களைத் தந்தவர்களைத் தாக்கவில்லை. மாறாக அவர்களின் எச்சரிக்கையினையும் மீறி உள் நுழைபவர்கள் மட்டுமே கொன்று புதைக்கிறார்கள்.

அப்படிக் கொல்லப்பட்ட உடலை வெறுமனே விட்டு வைத்தால் அது அழுகி, துர்நாற்றமெடுத்து வியாதிகளைப் பரப்பும் என்ற விவரம் அறிந்தமை யால் தான் அதை மண்ணில் புதைத்து மக்க வைக்கிறார்கள். நரமாமிசம் உண்பவர்களாக இருந்திருந்தால் அந்த உடலை உண்டு இருப்பார்கள்.



ஆகவே நமது மீடியாக்கள் உளறுவது போல் அவர்கள் அறிவற்ற காட்டுமிராண்டிகள் இல்லை. மாறாக பல்லாயிரம் ஆண்டு வாழ்வியல் அனுபவம் கொண்ட, இயற்கையை நன்கு உணர்ந்த மனிதக் கூட்டத்தினர் என்பது எனது உறுதியான முடிவு. அவர்கள் 2004 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் போது முன்னெச்சரிக்கையாக உயரமான இடத்திற் குச் சென்று தப்பித்து உள்ளார்கள். ஆனால் நம்மில் பலர் அன்றைக்கு பின்வாங்கிய கடலில் சென்று மீன் பிடிக்க முயன்று உயிர் இழந்தார்கள். அதற்குப் பிறகு தான் கடல் உள்வாங்கினால் அங்கிருந்து நாம் தெறித்து ஓட கற்றுக் கொண்டோம்.

ஆகையால் அவர்களுக்கு, நமக்கு அருளப்பட்ட பகவத் கீதையோ, பைபிளோ அல்லது குர்ஆனோ தேவைப்படாது. இயற்கையை நம் இச்சைக் கேற்றவாறு சீரழிக்கும் நமக்குத் தான் இறைவனின் அறிவூட்டல்கள் தேவை. அம்மக்களை தூரத்திலி ருந்தே பார்த்து நிறைய படிப்பினைகள் மற்றும் கற்றுக் கொள்ள வேண்டியவைகள் உண்டு.

வடக்கு சென்டினால் தீவுவாசிகளுக்குப் போதுமான உணவானது அங்கேயே கிடைப்பதால் தான் அவர்களால் ஒரு தன்னிறைவான வாழ்க் கையை, அங்கே இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக வாழ இயலுகின்றது. நமக்கோ பண்ணை மற்றும் விவசாய நிலத்திலிருந்து வந்தால்தான் உணவு என்ற நிலை. கஜா புயல் போன்ற பேரிடர்களால் அதற் கான பாதை அடைபட்டால் கை நிறைய பண மிருந்தும் வயிறு நிறையாத பட்டினி என்ற நிலைதான். வீசப்படும் உணவு பொட்டலங்களுக் காக ஹெலிகாப்டர்களை நோக்கி நாம் கையேந்து கிறோம். அவர்களோ தன்னிறைவான வாழ்வை வாழ்வதால் அங்கு வரும் ஹெலிகாப்டர்களின் மீது அம்பு, ஈட்டி எறிந்து விரட்டுகிறார்கள்.

இந்த கற்றலின் அடிப்படையில் தான் எங்களின் வீட்டு வாசலில் அங்கே களத்திற்குச் சென்றபோது கையில் கிடைத்த மரவள்ளிக் கிழங்கு குச்சிகளை கையால் இயங்கும் எர்த் ஆக்கரை வைத்து துளை யிட்டு, ஊன்றி வைத்துள்ளேன். இனி அங்கு தெளிக்கப்படும் தண்ணீர் மற்றும் எங்களின் வீட்டில் தயாரிக்கப்படும் இயற்கை எருவின் உதவி யால் மரவள்ளிக் கிழங்கானது வளர ஆரம்பித்து விடும். இறைவனும் அவன் படைத்த இயற்கையும் நாடினால் இன்னும் சில மாதங்களில், சில கிலோ கிழங்குகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அது சில வேளை உணவுக்காவது உதவும். இதற்கு நான் எந்தப் பணமும் கொடுக்கத் தேவை இல்லை என்பது மிக மிக முக்கியமானது. தற்போது எங்களின் கைவசம் உள்ள நிலம் இதுதான். நாங்கள் இங்கே வரும் முன்னர் இது செவ்வாய்க்கிரகத்தின் மேற்பகுதி போல வெறுமையாக இருந்தது. அதன் மீது கேன்களில் வைத்து கால்நடைகள் அதிகம் தின்னாத மூலிகைகளை வளர்க்கிறேன். மற்ற வைகள் எல்லாம் கான்கிரீட் பூசி மூடப்பட்டு விட்டன. ஆனால், அதன் மீதும் கேன்களில் மண் ணையும், வீட்டில் தயாரித்த இயற்கை எருவையும் நிரப்பி அங்கே படும் சூரிய ஒளியை உணவாக மாற்றி அறுவடை செய்கின்றேன்.

இனி நமது வாழிடங்களை இது போல் எளிமை யான முறையில் உணவு உற்பத்திக் கூடங்களாக மாற்றாவிடல் பேரிடர்களால் பெரும் சிக்கலுக்கு ஆளாகுவோம். நாம் உயிர் வாழ உண்ண உணவும், குடிக்க நீரும் அத்தியாவசியமானவைகள். பேரிடர் களின்போது நமது தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த “டிஜிட்டல் இந்தியா” என எல்லாம் கைவிரித்து விடுகின்றது. அது எதுவும் வேலைக்கு ஆகவில்லை. முக்கியமாக நிலத்தடி நீரை எடுக்க பெரிய அளவில் சோலார் பேனல்கள் தேவைப்படு கின்றன. கடந்த 25 ஆண்டுகளாக அந்த கணினித் துறையில் இருந்து நான் உருவாக்கியது எல்லாம் இதுவரையிலும் மக்காத, அபாயகரமான குப்பைகள் தான். அந்த பெரும் பாவத்தினைச் செய்தமைக்காக இயற்கையிடமும், அதை உருவாக்கிய ஏக இறைவ னிடமும் பாவமன்னிப்பினை கண்ணீருடன் கோரு கின்றேன். எங்களின் இறைவா எங்களை மன்னிப் பாயாக! எங்களை நேர்வழியின் பால் செலுத்து வாயாக! இனி மக்கக்கூடிய குப்பைகளையும் தரம் பிரித்து வீடுகளிலேயே இயற்கை எருவாக மாற்றி நகரம் தூய்மையாக இருக்க உதவி புரிவேன். மக்காத குப்பைகளையும் தரம் பிரித்து அவற்றினை மறு சுழற்சி மையங்களுக்கு அனுப்பி வைத்து, அதனால் ஏற்படும் பாதிப்பினைக் களைய முயல்வேன்.

இது போன்ற பேரிடர்களின் போது நாம் வயிற்றுப் பசியால் சோற்றுப் பொட்டலங்களை தேடியலையும் பரிதாப ஜீவன்களாக ஆகிவிடுகின் றோம். ஊருக்கே உணவு தந்த காவிரி டெல்டாவாக இருந்தாலும் இது தான் நமது நிலை. இதைத் தவிர்க்க நாம் இயற்கையுடன் இணைந்து உறவாட ஆரம்பிப்போம். இது பற்றிய கற்றல் அறிவு தேவை யுள்ளவர்கள் எந்தத் தயக்கமும் இன்றி என்னைத் தொடர்பு கொள்ளலாம். எந்நேரமும் உதவத் தயாராக உள்ளேன். இது ஒன்றும் மிகச் சிரமமான காரியம் அல்ல. நம் முன்னோர்கள் செய்தவற்றை தற்போது நமது வாழிடங்களுக்கு ஏற்ப மாறுதல் செய்து பயன்படுத்தலாம். இதற்காக மறுபடியும் காடுகளுக்கோ அல்லது வனாந்தரங்க ளுக்கோ ஓடத் தேவையில்லை. தற்போது உள்ள மாநகர வாழ்க்கை முறையிலேயே சிறிது நேரம் இதற்கென ஒதுக்கினால் போதுமானது. அவ்வளவு தான்.

“வாருங்கள், நாம் அனைவரும் இணைந்து இந்தப் பூமியை அனைத்து உயிர்களும் அழகான முறையில் வாழ்வதற்கான இடமாக மறுபடியும் மாற்றுவோம்“ நன்றி வணக்கம்.

**முகம்மது இஸ்மாயில்,**
98424 96391.

# காவல் துறையினர் தலையிடக்கூடாத உரிமையியல் நீதிமன்றங்கள் மூலமே தீர்வு காண வேண்டிய வழக்குகள்

எஸ். முருகேசன்

1. நிலம் சம்மந்தப்பட்ட வழக்குகள்
2. பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தப்பட்ட வழக்குகள்.
3. ஒப்பந்த வழக்குகள்.
4. விளம்புகை பரிகார வழக்குகள்
5. ஏற்றது ஆற்றுக வழக்குகள்
6. பாகப் பிரிவினை வழக்குகள்
7. இழப்பீடு (நஷ்ட ஈடு) கோருதல் வழக்குகள்.
8. அவதூறு வழக்குகள்.
9. வாரிசுரிமை வழக்குகள்.
10. விவகாரத்து வழக்குகள்.
11. அடைமான வழக்குகள்.
12. அடைமானச் சொத்து மீட்பு வழக்குகள்.
13. செயலுறுத்துக் கட்டளை வழக்குகள்.
14. உறுத்துக்கட்டளை வழக்குகள்.
15. கணவன், மனைவி மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான வழக்குகள்.
16. சீவனாம்ச வழக்குகள்.
17. திருமணத்தைச் செல்லாது என்று அறிவிக்கும் வழக்குகள்.
18. நொடிப்புநிலை வழக்குகள்.
19. காப்பாளர் நியமன வழக்குகள்.
20. குழந்தைகளை மீட்பதற்கான வழக்குகள்.
21. சொத்து மீட்பு வழக்குகள்.

ஆகியவை உரிமை வழக்குகளாகும். இவ்வுரிமை வழக்குகளில் காவல்துறை தலையிடக் கூடாது.



# முயற்சி

சிறுகதை



ஒரு இடத்தில் யானைகள் நிறைய கட்டப் பட்டிருந்தன. அந்த வழியே போன ஒருவன், யானைகளை பார்த்தபடியே சென்றான். ஒரே ஒரு மெல்லிய சங்கிலி மட்டும் தான் யானைகளின் காலில் கட்டி இருந்தது. இவ்வளவு பெரிய உருவம் கொண்ட யானை அதை அறுத்து கொண்டு போகாதா என்று வியந்தான். அருகில் இருந்த பாகனிடம்,

"இந்த யானைகள் இதை அறுத்து கொண்டு போகாதா...? என்று கேட்டான்.

அவன் சிரித்தபடி, "இந்த யானைகள் குட்டியாக இருக்கும்போது இதில்தான் கட்டிவைத்தோம், அப்போது அது எவ்வளவோ இழுத்துப் பார்த்தும், இந்தச் சங்கிலியை அறுக்க

முடியவில்லை. யானைகள், பெரிதாக பெரிதாக தன்னால் இதை அறுக்க முடியாது என்கிற எண்ணமும் சேர்ந்தே வளர்ந்தது. இப்போது அந்த எண்ணம் மனதில் பதிந்து,

அறுக்கும் முயற்சியை கைவிட்டுவிட்டது. அறுக்க முயற்சிப்பதேயில்லை" என்று சொன்னான்.

அந்த மனிதன் ஆச்சரியப்பட்டான், இந்த யானைகள் ஒரு நிமிடத்தில் இந்த சங்கிலியை அறுத்து கொண்டு போகலாம், ஆனால் அவைகள் அதற்கான முயற்சியை செய்வதில்லை

அதனாலேயே அவைகள் கட்டுண்டு கிடக்கின் றன.

இந்த யானைகள் போல் நம்மில் எத்தனை பேர்" முன்பு சில முறை தோற்றதனால், மீண்டும் முயற்சிக் காமலேயே துவண்டு போகிறோம், முயற்சிப்பதையே விட்டு விடுகிறோம்? சிந்தித்துப்பாருங்கள்!

வெற்றியும் தோல்வியும் தற்காலிகம் தான்.. முயற்சி மட்டும்தான் நிரந்தரமானது...இதை

புரிந்தவர்கள் வாழ்க்கையில் மட்டுமில்லை வாழ்க்கையையே ஜெயிக்க முடியும்...!

தேர்தலின்போது அரசியல் கட்சிகளுக்கு முன்பு பணமாக வழங்கப்பட்டது. இதில் கருப்பு பணம் புழங்குவதாக புகார் எழுந்ததால் இதனை தடுக்க தேர்தல் பத்திரங்களாக வழங்க மத்திய அரசு முடிவு செய்தது. பதிவு பெற்ற அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற, சட்டமன்ற பொதுத் தேர்தல்களில் குறைந்த பட்சம் ஒரு விழுக்காடு ஓட்டு வாங்கிய கட்சிகளும் இந்த தேர்தல் பத்திரங்களைப் பெற முடியும்.

இந்தியாவைச் சேர்ந்த தனிநபரோ அல்லது நிறுவனங்களோ இந்த தேர்தல் பத்திரத்தை வாங்கி தாங்கள் விரும்பும் அரசியல் கட்சிக்கு நன்கொடையாக அளிக்கலாம். அவர்கள் வங்கிக் கணக்கு மூலம் அந்தப் பத்திரத்தை பணமாக மாற்றிக் கொள்ளலாம். இந்தத் தேர்தல் பத்திரங்களை பாரத ஸ்டேட் வங்கி மட்டுமே வழங்கும். இந்த நடைமுறை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வந்தது.

இந்நிலையில் மும்பையைச் சேர்ந்த தகவல் அறியும் உரிமை ஆர்வலர் மனோரஞ்சன் ராய் என்பவர், இதுவரை எத்தனை தேர்தல் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன? அதன் மதிப்பு எவ்வளவு? வழங்கிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பெயர்கள் என்ன? என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டிருந்தார்.

இதற்கு பாரத ஸ்டேட் வங்கியின் உதவி பொது மேலாளர் நரேஷ்குமார் ரஹேஜா பதில் அளித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது.

மே நான்காம் தேதி வரை மொத்தம் 5,029 கோடி மதிப்புள்ள 10,494 தேர்தல் பத்திரங்கள் ஒன்பது கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் பத்திரங்கள் வாங்கிய தனிநபர் அல்லது நிறுவனங்கள் பெயரை வெளியிட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால் அதனை தெரிவிக்க முடியாது. வெளியிட்ட 10, 494 தேர்தல் பத்திரங்களில் 10,388 பத்திரங்கள் பணமாக மாற்றப்பட்டுவிட்டது. அதன் மதிப்பு மட்டும் ரூ. 5, 011 கோடி. என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல் பற்றி கருத்து தெரிவித்த மனுதாரர் மனோரஞ்சன் ராய் கூறியதாவது:

தேர்தல் பத்திரங்கள் அதிகரித்திருப்பத அரசியல் கட்சிகளுக்கும், பெரு நிறுவனங்களுக்கும் இடையே உள்ள தூய்மையற்ற தொடர்பை சட்டபூர்வமாக்கியது தானே தவிர வேறு ஒன்றுமில்லை. இது நாட்டில் பெரிய அளவிலான ஊழலுக்குதான் வழி வகுக்கும். தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை வழங்கிய தனிநபர் மற்றும் நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்டு இருந்தால் இந்த அழிவு சற்று குறையும்.

பெருநிறுவனங்கள் இவ்வளவு பெரிய தொகையை சமுதாயப் பொறுப்புள்ள திட்டங்களுக்கோ, ஏழைகள் மற்றும் தேவையுள்ள பயனாளிகளுக்கோ செலவழித்து இருக்கலாம். மற்றபடி இந்த நன்கொடை அரசியல் கட்சிகள் ஓட்டுக்காக வாக்காளர்களுக்கு கொடுப்பதற்கு தான் பயன்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் பத்திரம்



இன்றைய பிளாஸ்டிக் கழிவுப் பிரச்சனைகளில் அதிக கவனத்துக்குரிய ஒன்று, கடலில் மிதக்கும் கழிவுகள். இப்பிரச்சனைக்கு ‘விண்ணில்’ இருந்து தீர்வு காண முடியுமா என்று விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

இது மிகவும் கடினமான செயல் என்பதை பலரும் ஒப்புக் கொள்கின்றனர். காரணம், நாம் தூக்கி எறியும் தனித்தனி குப்பைகள் மிகச் சிறிய அளவில் இருக்கும் என்பதால், அவற்றை செயற் கைக் கோள்கள் மூலம் கண்டுபிடிப்பது சிரமம்.

ஆனால், தண்ணீரில் பிளாஸ்டிக்கின் ஒளி பிரதிபலிக்கும்போது அக்கழிவுகளைக் கண்டு பிடிக்க முடியும் என்ற கண்ணோட்டத்தில் இந்த விசயத்தை அணுகுகின்றனர். இங்கிலாந்தின் பிளைமவுத் கடல் ஆய்வகம் நடத்திய சோதனைகள் இதை ஊக்குவிக்கும் விதத்தில் அமைந்துள்ளன.

‘கடலில் ஒரு தனி பிளாஸ்டிக் பாட்டில் மட்டும் மிதப்பதை நீங்கள் பார்க்க முடியாது. ஆனால், இந்தப் பொருட்களை ஒட்டுமொத்தமாக நாம் காண முடியும்’ என ஆய்வாளர் டாக்டர் லாரன் பியர்மேன் கூறி யிருக்கிறார்.

பூமியைக் கண்காணிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சென்டினல் 2 செயற்கைக் கோள்கள், ஐரோப்பிய விண்வெளி மையத்தால் கடந்த 2015, 2017 ஆண்டுகளில் நிறுவப்பட்டன. இந்தச் செயற்கைக் கோள்களின் முக்கிய நோக்கம், தொடர்ச்சியாக மாறி வரும் பூமியின் நிலப்பரப்பு களின் வரைபடங்களை உருவாக்குவது ஆகும். அதே சமயத்தில் இவை கடலோரப் பகுதிகளின் நிலையையும் படம் பிடிக் கின்றன.

கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கண்காணிக்க வேண்டும் என்றால், கடலோரப் பகுதிகள்தான் சரியான இடம். ஏனெனில், ஆண்டு தோறும் கடலில் கலக்கும் 80 இலட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் இந்த இடத்தின் வழியாகத் தான், அதாவது நதிகள் மற்றும் முகத்துவாரங்கள் வழியேதான் கடலில் சென்று சேர்கின்றன.

சென்டினல் செயற்கைக்கோள்கள் இங்கிலாந் தில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இந்த மண்டலங் களைப் படம் பிடிக்கும். ஆனால், இதில் ஒரு பிரச்சனை இருப்பதாக பியர்மேன் கூறுகிறார். செயற்கைக்கோள்கள் எடுக்கும் படங்கள் 10 மெகா பிக்சல் ரெசல்யூசனில் இருக்க, ஒவ்வொரு பிக்சலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் இருந்தால் மட்டுமே படத்தில் இருக்கும் பொருட்களை நாம் சரியாகக் கண்டறிய முடியும்.

இருந்தபோதும், தனக்கு ஆதரவாக இருக்கக் கூடிய இரு காரணிகளை அவர் குறிப்பிடுகிறார். ஒன்று, நதிகள் சென்று கடலில் சேரும் இடத்தில் தான், மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் ஒன்றாகச் சேரக்கூடும். பெரும்பாலான நேரங்களில் அது செடி கொடிகளாக இருக்கலாம். ஆனால், பிளாஸ்டிக் போன்ற மற்ற குப்பைகளும் அதில் அடங்கும்.

இரண்டாவது காரணி, சென்டினல் செயற்கைக் கோள்களில் உள்ள கண்டறியும் கருவிகளின் தரம் இதற்குச் சாதகமாக அமைகிறது.

ஒவ்வொரு பொருளும் ஒளியை உண்டாக்கும் மாறுபட்ட அலைவரிசைகளைத் துல்லியமாக தனால் கண்டுபிடிக்க முடியும். இது தரும் புகைப்படங்களின் பிக்சல்களை வைத்து அது என்ன பொருள் எப்தைக் கண்டுபிடிக்க முடியும் என்று பிளைமவுத் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

விஞ்ஞானிகளின் இந்த முயற்சி பலன் தருமா என்பது போகப் போகத் தெரியும்.

**கே. பவானி**

# கடலில் மிதக்கும் கழிவுகளுக்கு விண்ணில் இருந்து தீர்வு?



# ஆழிப்பேரலை

ஆழிப்பேரலை சுனாமி வந்தபோது முதல் முறையாக புதுசா வந்த மாதிரி பார்த்து அதிர்ச்சி அடைந்தோம். ஆனால், நம் வரலாறுகளை சரியாகப் படித்திருந்தோமென்றால் சுனாமி என்பதைப் பற்றிய ஒரு 'விழிப்புணர்வு' நமக்கு இருந்திருக்கும்.

மாத்தளை சோமு என்பவர் தனது புத்தகமான 'வியக்கவைக்கும் தமிழகம்' என்பதில் தமிழ்நாட்டை 7 'ஆழிப்பேரலைகள்' தாக்கி உள்ளதாகக் குறிப்பிடு கிறார். சங்ககாலத்தில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களை விற்றூற்று மூதெயினனார் (குறுந் தொகை 372) எழுதியுள்ளார். 'கடுவளி' என்றழைக் கப்பட்ட பேய்க்காற்று பனைமரத்து மடல்களைக் குருத்தோடு அடித்துச் சென்றுவிடும் ஆற்றலுடை யது. இப்படி வீசி எறியப்பட்ட மடல்கள் வெகு தொலைவில் உள்ள மலை உச்சியில் காய்ந்து கொண்டிருக்கும். இக்காற்றினால் கடற்கரை மணலானது வெகுதொலைவிற்கு மேலே எழும்பி பின் வீசியடிக்கப்படும். அவ்வாறு வீசியெறியப் பட்ட மணலானது அருவியல் நீர் கொட்டுவது போல மணலைகொட்டும். இக்காட்சியை அயிர் சேற்று அருவி என்று குறிப்பிடுகிறார். *(குறுந்தொகை 372)*

பாதிப்புகளை பலமுறை சந்தித்துள்ள மக்கள், அதற்கான தீர்வுகளை இயற்கையே வழங்கி இருப்ப தையும் அறிந்து வைத்துள்ளனர். சுனாமி யால் பாதிக்கப்படாத அளவில் ஊர்களை வடிவமைத் துள்ளனர். சங்க இலக்கியங்களில் அத்தகைய ஊர்களைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. முக்கியமாக மூன்று கடல்கள் சூழப்பட்டுள்ள தென்பகுதியே பாதிக்கப்படும் என்பதை அறிந்தே இப்பகுதிகளில் 'தாழை' மரங்களை வளர்த்து வந்துள்ளனர். (வேதிப்பெயர் Pandanus odoratissimus இம்மரத்தின் சிறப்பைப் பற்றி தனியாக நிறைய எழுதலாம்.)

கண்டல் மரங்களும், தாழை மரங்களும் கடலோரப் பகுதியில் தடுப்பணை போல இருந்து வந்துள்ளன. நம் முன்னோர்களும் இதை அறிந்து வளர்த்து வந்துள்ளனர். ஆனால் முன்னோர்கள் சொல்லிச் சென்றவைகளை எல்லாம் விட்டுவிட்டு மந்திரத்தில் மாங்காய் பழுக்க வைத்துவிடலாம் என்று அறிவியல் ஆராய்ச்சி பண்ணிவிட்டு வானத் தைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். சுனாமி யால் பாதிக்கப்பட வாய்ப்பில்லாத ஒரு ஊர் இருந்த தாம். அதன் பெயர் கண்டவாயில் (கண்டல்வேலி)



"புதுமணற் கானல் புன்னை நுண்தாது
கொண்டல் அசைவளி தூக்கு தொறும்
குருகின் வெண்புறம் மொசிய வார்க்கும்
தென்கடல் கண்டல் வேலிய ஊர்" (நற்றிணை 74.7)

இவ்வூரைச் சுற்றி உப்பங்கழி சூழ்ந்த தோட்டங்கள் இருக்கும். இதன் கடற்கரை, முற்றிய பனை மரங்கள் மணல் மேட்டில் முள்வேலி இட்டது போல் சூழப்பட்டிருக்கும்.

'பனைமரங்கள், ஞாழல் (புலிநகக் கொன்றை), தாழை, புன்னைமரங்கள்' போன்றவை கடற்கரைகளைச் சுற்றி அடர்ந்த வேலிபோல் அமைந்து சுனாமி பேரலைகள் ஊருக்குள் வருவதைத் தடுக்கும். இப்படிப்பட்ட மரங்களால் சூழப்பட்ட சோலைகளை நாட்டு வேலி, பெருநீர்வேலி, கண்டல்வேலி என, பல பெயர்களில் அழைத்துள்ளனர். இதைப் பார்க்கும் புலவர்க்கு மதில்கள் சூழ்ந்த அரண்மனை கோட்டையைப் போல தோன்றுகிறதாம்.

"அயில்திணி நெடுங்கதவு அமைத்து, அடைத்து
அணி கொண்ட எயில் இடுகளிறே போல்" (கலி. 135.35)

பேரலைகள் போர் யானைகள்
அரண்மனை கோட்டைகள் கண்டல் சோலைகள்
மோதுற அலைகைளோட கதி?
"பெருநீர்க்கள் பொறு சிறுனுரை
மெல்ல மெல்ல இல்லாகுமே" (குறுந் 290.46)

இந்தச் சோலைகளில் மோதியதும் அவை சிறுநுரையைப் போல சிதறி ஒன்றுமில்லாமல் போய்விடுகிறதாம். இது கற்பனையாக எழுதப்பட்ட வரிகள் அல்ல. பேரலை சிறுநுரையாக மாற தாழையின் மடங்கிய தன்மைதான் காரணம் என்றும் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். "வணங்கிய தாழை" (அகம். 128.12) என்ற பாடலில் காக்கும் கடல், அருள் மறந்து அழிக்க முற்படும்போது அதன் சினத்தைத் தணிக்க தாழையின் மடங்கிய தன்மையாலே இயலும் என்று கூறுகிறது.

'திரைமுதிர் அரிய தடந்தாட் தாழை' (அகம்.131.35) புன்னை, தாழை இரண்டும் உறுதியானவை. பேரலைகளுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடியவை. கடற்கரையோரங்களிலும், ஆற்றின் கரையோரங்களிலும் வளர்த்து வந்துள்ளனர். பரிபாடல் (126) இவற்றை கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

**சங்க இலக்கியங்களில் அத்தகைய ஊர்களைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. முக்கியமாக மூன்று கடல்கள் சூழப்பட்டுள்ள தென்பகுதியே பாதிக்கப்படும் என்பதை அறிந்தே இப்பகுதிகளில் 'தாழை' மரங்களை வளர்த்து வந்துள்ளனர்.**

என்ன தெரியும் இன்றைய மக்களுக்கு?! கடல் போன்ற சங்கப் பாடல்களில், மரங்களைக் குறித்த ஒரு துளி மட்டும் இங்கே சொல்லியிருக்கிறேன். எத்தனை வியப்புகள் நம் முன்னோர்களிடம், அவர்கள் வழி வந்த நாம் வழி மறந்து, முன்னோர்கள் சொன்னதையும் மறந்து விட்டோம். அவர்கள் வளர்த்து, வணங்கி, பராமரித்து வந்த மரங்களை, காடுகளை அழித்து, சிதைத்து, சின்னாபின்ன படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் செய்தவை எல்லாம் அடுத்தடுத்து வரும் தலைமுறையினரின் நல்வாழ்வை எண்ணி. ஆனால், நாமோ, நாம் பெற்ற குழந்தைகளுக்குக் கூட? நல்லதை விட்டுச் செல்ல இயலாதவர்களாக இருக்கிறோம்.

இருக்கும் மரங்களை வெட்டி, ஆற்று மணலைச் சுரண்டி, ஆடம்பர நவீன கான்கிரீட் வீடு கட்டி, அதன் பின்னர் மரக்கன்று நடுகிறோம் வேடிக்கையாக இல்லையா? இயற்கை வேடிக்கை மனிதர்களைப் பார்த்து கைகொட்டிச் சிரிக்கும்.

**சோழநாச்சியார்.**


**விளம்பர கட்டண விபரம்**

**முன்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ. 7,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ. 5,000/- (முழுப்பக்கம்)**

# உங்கள் வாழ்வில் அண்ணா எப்படி நுழைந்தார்?





தமிழ்ப்பண்பாட்டு ஆய்வாளர்களில் முக்கிய மான ஒருவரான பேராசிரியர் தொ. பரமசிவன், நாட்டார் வழக்காறு சார்ந்த பார்வையில் புது வெளிச்சம் பாய்ச்சியவர். திராவிடம் எனும் சிந்தனை எப்படித் தமிழ் மண்ணில் உருக் கொண்டது. அதற்கான வரலாற்று பண்பாட்டுப் பின்னணி என்ன என்று தர்க்கபூர்வமாக நிலைநாட்டியவர். பண்பாட்டுத்தளத்தில் அண்ணா வின் பங்களிப்புகளை பகிர்ந்துகொண்டார்.

நான் அவரை நேரில் பார்ப்பதற்குப் பல ஆண்டுகள் முன்னரே எழுத்து வழியாக என் வாழ்க் கைக்குள் வந்துவிட்டார். அது அரசியலுணர்வு மிகுந்திருந்த காலகட்டம் பத்து வயதிலேயே திராவிட நாடு, முரசொலி வாசிக்க ஆரம்பித்து விட்டேன். பெரும்பாலான பையன்களுக்குப் பாடப்புத்தகங்களைத் தாண்டி இப்படியான வாசிப்பு இருக்கும். 1962 தேர்தலில் அண்ணா தோற்றபோது நானும் என்னுடைய வகுப்பு நண்பர்களும் பள்ளி மைதானத்தில் நின்று அழுதது ஞாபகம் வருகிறது. அப்போது எட்டாவது படித்துக்கொண்டிருந்தோம். அப்படியென்றால் பாருங்கள். கல்லூரியில் படிக்கும்போது, வகுப்பி லுள்ள 63 மாணவர்களில் 60 பேருக்கு ஏதேனும் ஒரு கட்சி சார்பு இருந்தது. தனது வீடு, தெரு, சாதி தாண்டி மாணவனுக்கென ஒரு பொது உலகம் இருந்தது. அவர்கள் பேசுவதற்கு சண்டை போடு வதற்கும் ஏதோ ஒரு தத்துவம் இருந்தது. கட்சி வேறுபாடுகளைத் தாண்டியும் அண்ணா எல்லோர் மத்தியிலும் செல்வாக்கோடு இருந்தார். தமிழால், தமிழ் அரசியலால் அவர் எல்லோரையும் இணைத் தார்.

**திராவிட அரசியலும் தமிழ் அரசியலும் வேறுவேறு இல்லையா?**

தமிழ்தான் இங்கே திராவிட அரசியலுக்கான உயிர். திராவிடம் என்று எதைச் சொல்கிறோம்? இரு விளக்கங்கள் கொடுக்கலாம். இனம் சார்ந்து ஆரியர், திராவிடர் என்று இங்குள்ள இரு இனங் களில், எல்லா இடங்களையும், தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முற்படும் ஆரியப்பண்பாட்டுக்கு

மாற்றாக, பன்மைத்துவத்தைப் பேசுகையில் திராவிடம் பேசுகிறோம். அடுத்து, இடம் சார்ந்து தென்னகத்தை கர்நாடகம், ஆந்திரம் தெலுங்கானா, கேரளம், தமிழ்நாடு இணைந்த பகுதியைக் குறிப்பிடுகையில் திராவிடம் பேசுகிறோம். ஆரியம் திராவிடம் வரலாற்று வேறுபாடுகள் அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டவை. பண்பாட்டுத் தளத்திலும் இந்த வேறுபாடுகள் பல விஷயங்களில் இன்றளவும் நீடிக்கின்றன. தென் மாநிலங்களிலும் திராவிட மொழி பேசுபவர்களுக்கென்றும் தனித்த பண்பாடு இருக்கிறது. பிராமணர்கள் அல்லாத எல்லா சாதிகள் மத்தியிலும் பொதுவான அம்சங்கள் நிறையவும், ஒவ்வொரு சாதிக்குமான சின்னச் சின்ன பண்பாட்டு அசைவுகள் இருப்பதையும் பார்க்கிறேன். ஓர் உதாரணத்துக்கு இந்தச் சமூகங்களில் தாய்மாமனுக்குள்ள மரியாதையைச் சொல்லாம். தாய்வழிச் சமூகத்தின் எச்சப்பாடாகத் தொடர்கிறது இது. ஆரியப் பண்பாட்டில் இது கிடையாது. அடுத்து இறந்தவருக்கு சடலத்துக்குக் கொடுக்கப்படும் மரியாதை, நிறையச் சொல்லலாம். திராவிட அரசியல் என்பதன் அடிநாதம் அவரவருக்குரிய பிரதிநிதித்துவம், அதிகாரத்தை அவரவருக்குக் கொடு என்பதுதான் இங்கே அரசியல் பண்பாடு எல்லாவற்றிலும் பிராமணியத்தின் ஆதிக்கம் இருப்பதால், பிராமணியத்துக்கு எதிரான இயக்கமாக அது உருவெடுத்து, ஆனால் தொடக்கம் முதலாகவே பிராமணர்களை எதிரியாக்கவில்லை. இன்னும் ஒருபடி மேலே போய் பிராமணர்களையும் இயக்கத்தினுள் கொண்டு வந்தார் அண்ணா. சமூகரீதியாக பிராமணர்கள் மட்டும் அல்லாது இங்கேயே வந்து தங்கிவிட்ட மாற்று மொழியினரையும் உள்ளடக்கும் விதமாகத் தமிழையும் தமிழுணர்வையும் இணைப்புச் சங்கிலியாக்கினார். திராவிட நாடு என அவர் முன்வைத்த நாட்டினுடைய நிர்வாகமும் கூடத் தெளிவாக மலையாளிகளுக்கு, தெலுங்கர்களுக்கு, கன்னடர்களுக்கு, தமிழர்களுக்கு என்று அவரவருக்கான தனி நிலத்தையும் அங்கே அவரவர் சுயாட்சியையும் உறுதிப்படுத்துவதாகவே இருந்தது. ஒரு கூட்டரசாக அது இயங்கலாம் என்று அவர் நினைத்தார். ஆகையால், திராவிட அரசியலும் தமிழ் அரசியலும் வேறுவேறு அல்ல தமிழ் அரசியலுக்குக் கூடுதல் தத்துவ பலத்தைத் தருவது என்று திராவிட அரசியலைச் சொல்லலாம்.

***அண்ணா உண்டாக்கிய முக்கியமான பண்பாட்டு மாற்றங்கள் என்று எவற்றை சொல்வீர்கள்?***

இந்தியத் துணைக் கண்டத்தில் சாதிக்கும் பிராமணியத்துக்கும் உள்ள செல்வாக்கை அவர் முழுமையாக உணர்ந்திருந்தார். அதனால்தான், அரசியல் தளத்தில் பங்கெடுத்து ஒரு இயக்கத்தின் லட்சியத்தில் சாதி ஒழிப்பையும் முக்கியமான ஒன்றாக்கினார். சகலத்திலும் பிராமணியம் கலந்திருப்பதால் தான் ஒவ்வொரு தளத்திலும் அதற்கு மாற்றான ஒன்றை நிறுவ முற்பட்டார். தமிழ்நாட்டு அரசியல் களத்திலிருந்து சாதிப் பெயரை ஒழித்ததே அண்ணாவின் சாதனைகளில் ஒன்றுதான் இஸ்ரோவில் தலைவராக இருந்த விஞ்ஞானியே மாதவன் நாயர் என்று சாதியைக் கூடச் சூடிக்கொள்ளும் நாடு இது. எங்கே சாதியொட்டு இல்லாத அரசியல்வாதி இருக்கிறார். தமிழ்நாடு தவிர? “சாதி கேட்பது கேவலம்” என்ற உணர்வை இங்கே ஒரு தலைமுறைக் கால கட்டத்துக்குள் இங்கே கொண்டுவந்துவிட்டார். சாதனை இல்லையா இது?

சங்க இலக்கிய மரபை அவர் மீட்டெடுத்தார். அதன் வழி புதிய மதிப்பீடுகளை உருவாக்கினார். தமிழ்நாட்டின் அரசியலுக்கு என்று தனிக்கலாச்சாரத்தை உருவாக்க முற்பட்டார். எல்லோரையும் அணைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. பொங்கல் பண்டிகைக்குப் புது உருவம் கொடுக்க முற்பட்டாரே! ஒரு சமூகம் இளைப்பாறிக்கொள்கிற நிகழ்ச்சி திருவிழா. பிணைக்கப்பட்டிருக்கிறது சமூக மாற்றம் என்பது அரசியல் தளத்தில் மட்டுமே நிகழ்வது கிடையாது என்பதும் பண்பாட்டுத் தளத்தில் வேர் பிடிக்காத மாற்றம் நீடித்து நிலைக்காது என்பது அண்ணாவுக்குத் தெரிந்திருந்தது. அதனுடைய விளைவாகவே தமிழர்த் திருநாளான பொங்கல் பண்டிகைக்குப் புத்துயிர் கொடுத்தார் அண்ணா. எல்லோரையும் தமிழர்கள் என்ற அடையாளத்தின் கீழ் ஒன்று திரட்டும் இலக்கும் சமத்துவ லட்சியமும் அதன் பின்னே இருந்தன. கணக்கைத் தொடங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதும்கூட இதன் தொடர்ச்சிதான். அண்ணாவைப் பொறுத்த அளவில் இந்தியக் கலாச்சாரம் என்று ஒன்று கிடையாது. வேண்டுமானால் இந்தியக் கலாச்சாரங்கள் என்று சொல்லலாம். ஏனென்றால், கலாச்சாரங்கள் தொகுப்பே இந்தியா. இதற்கு வழிகாட்டும் நிலமாகவே தமிழ்நாட்டை அண்ணா கனவு கண்டார். அதற்கான பாதையாக ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் இருந்த பேச்சு, எழுத்து, உரையாடல்கள், வாசிப்பு, வெளியை வெகுமக்கள் நோக்கி நகர்த்தினார்.

***கடவுள் எதிர்ப்பு திராவிட இயக்கத்துக்கு ஒரு சுமைதானே?***

அப்படிக் கிடையாது, பெரியாரை, அண்ணாவை முழுமையாகப் படித்தவர்கள் எவரும் கடவுள்களை அவர் தாக்கிப் பேசியதன் நோக்கம் சாதி ஒழிப்பு

என்பதைத் துல்லியமாகப் புரிந்துகொள்வார்கள். பெரியார், அண்ணா இருவருமே நிறுவனமய மாக்கப்பட்ட மதங்களைச் சமூகக் கேடுகளாக நினைத்தனர். அதனாலேயே தாக்கினார்கள். நிறுவனமயமாக்கப்பட்ட மதத்தை நான் வெறுக் கிறேன்“ என்பதைப் பல இடங்களில் பேசியிருக் கிறார் அண்ணா, பெரியார் கடவுள் மறுப்பைத் தூக்கிப் பிடித்தது வைதீக எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்புக்காகத்தானே தவிர, ஆன்மீக எதிர்ப்பு என அதைப் பார்க்க முடியாது பிள்ளையார் சிலையைத் தான் பெரியார் உடைத்தார். சுடலைமாடன் சிலையை அல்ல.

**பெருந்தெய்வ சிறுதெய்வ அரசியலெல்லாம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இருக்கும்?**

பிராமணியம் உள்ளவரை நீடிக்கும். நாட்டு தெய்வங்களை மக்களின் தெய்வங்களாகப் பார்க்கிறேன். இந்த ஆன்மிகம் மக்களுடைய ஆன்மிகம். அதாவது, இது நிறுவனமயமாக் கப்பட்டது கிடையாது. இன்றைக்கும் கிராம தெய்வங்களுக்கான திருவிழாவில் மத எல்லைக்கு அப்பாற்பட்ட கூடுகை, பங்கேற்பைப் பார்க்க முடியும். கடவுளுக்கும் மக்களுக்கும் குறுக்கே யாரும் இல்லாமல் வழிபட முடியும். கிராம எல்லையில் நிற்கிற வீரனை நீங்கள் தொட்டுக் கும்பிடலாம். படையல் போடும்போது குடும்பப் பெரியவர்தான் பல இடங்களில் பூஜைசெய்கிறார்கள். இந்த ஜனநாயகம் நிறுவனமயமாக்கப்பட்ட பெருந்தெய்வ வழிபாட்டில் கிடையாது. அது நமக்கும் கட வுளுக்கும் இடையே ஒரு ஆளை நிறுத்துகிறது. சம்பிரதாயங்களை நிறுத்துகிறது.

இதன் மூலம் கிடைக்கும் ஆன்மிக அதிகாரத் தையும் அதன் வழியாகக் கிடைக்கும் அரசியல் அதிகாரத்தையும் கொண்டே பிராமணியம் வாழ் கிறது. எப்போது வரை மேல், கீழ் என்ற அடுக்கு முறை இருக்கிறதோ, அப்போதுவரை அதற்கு எதிரான கலகங்களும் நீடிக்கத்தான் செய்யும். நான் என்ன சாப்பிடு கிறேனோ, அதை என் தெய்வம் சாப்பிடுகிறது. நான் கறி சாப்பிட்டால் என் தெய்வமும் கறி சாப்பிடும், நான் மது குடித்தால் அதுவும் மது குடிக்கும் இதுவும்கூட ஒரு உயர்தர சமத்துவம்தானே? அப்படிப்பட்ட மக்களின் தெய்வத்தை எப்படி நீங்கள் அழிக்க முடியும்?

அண்ணாவின் பெருமையாக நீங்கள் தமிழ் அரசியலைக் குறிப்பிட்டீர்கள். ஆனால் தமிழகத் தில் தமிழரல்லாதோர் தெலுங்கர்கள், மலையாளி கள், கன்னடர்கள் உள்ளிட்டோரும் அரசியலில் கோலோச்சுகிறார்கள். இதை எப்படிப் புரிந்து கொள்வது?

இவையெல்லாம்தான் பெரியாரின், அண்ணா வின், திராவிட இயக்கத்தின் சாதனை என்று சொல்கிறேன். தமிழ் அரசியலுக்குப் புத்துயிர் கொடுத்தவர் அண்ணா. அப்படிக்கொடுக்கும்போது மத. இன வெறியூட்டாமல், இந்த மண்ணின் உணர்வைப் பெறும், தமிழுணர்வைப் பெறும் ஒவ்வொருவரும் தமிழர் என்பதை அடிப்படை யாக்கினார். பிராமணரல்லாதோர் இயக்கமாகப் புகழ்பெற்ற ஒரு இயக்கத்தின் வழிவந்த கட்சியில் ஜெயலலிதா என்ற பிராமணர் எப்படித் தலை மைக்கு வந்தார் என இதைப் பார்க்கக்கூடாது அந்த இயக்கத்தை அவரும் உள்வாங்கினார் என்றும் அதனால் தலைமை ஏற்றார் என்றும்தான் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் 69% இட் ஒதுக்கீடு சாதனையில் ஜெயலலிதாவுக்கும் பங்கு இருக்கிறது. இல்லையா? எம்.ஜி.ஆர். தன்னை ஒரு மலையாளி யாக நினைக்கவே இல்லையே! டெல்லி ஆதிக்கத் துக்கு எதிராக எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் கூடப் பேசியிருக்கிறார்கள்.

**இனவுணர்வை மதவுணர்வு வெல்ல முடியுமா?**

முடியவே முடியாது. ஏனென்றால் இனம் உங்கள் பிறப்போடும், உடலோடும் உயிரோடும் கலந்திருக் கிறது. மதம் நீங்கள் நினைத்த மாத்திரத்தில் மாற்றிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. மேலும், மதம் எந்தக் காலத்திலும் இனத்துக்கான அடை யாளமாக இருக்கவே முடியாது. ஏனென்றால், மதம் மாறும்போது அடையாளம் மாறுவதில்லை. இத்தாலியில் இருக்கும் கிறிஸ்தவமும் தமிழ்நாட் டில் இருக்கும் கிறிஸ்தவமும் ஒரே இன அடையாள மாக என்றுமே மாற முடியாது.

**சரி, அண்ணாவின் மிகப்பெரிய சாதனை யாக எதைச் சொல்வீர்கள்?**

தமிழ் நிலப்பரப்புக்குத் தமிழ்நாடு எனப் பெயரிட்டது. இந்த உலகம் உள்ளவும் தமிழ்நாட் டிற்கு அவர் சூட்டிய பெயர் நிலைக்கும். அது அவரது கனவைக் காலமெல்லாம் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லும்! இனவு ணர்வை மதவுணர்வு வெல்லவே முடியாது. ஏனென்றால், இனம் உங்கள் பிறப்போடும், உட லோடும், உயிரோடும் கலந்திருக்கிறது. மதம் நீங்கள் நினைத்த மாத்திரத்தில் மாற்றிக்கொள்ளக் கூடிய தாக இருக்கிறது.

**தொ. பரமசிவன்,** *தமிழ் இந்து 22.03.2019*

# பொன்பரப்பி கலவரம்?



வன்னியர் சமூகத்தில் 3000 தலகட்டுகளுக்கு மேலாக வசிக்கின்றனர். பறையர் சமூக மக்கள் 600 குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்றனர். வன்னியர் சமுதாய மக்கள் பெருபான்மையினராக இருக்கின்றனர்.

தொடக்க பள்ளி மட்டும் சேரி பகுதியில் இருக்கிறது. மற்ற அனைத்து அத்தியாவசிய தேவைகளுக்கும் வன்னியர் தெருக்களுக்கே செல்ல வேண்டும்.

இரு சமுதாய மக்களும் பெரிய அளவில் பொருளாதாரத்தில் உயரவில்லை அடிப்படை வசதியான சாலை வசதியை கூட முழுமையாக இல்லாத கிராமமாக உள்ளது. ஊர் முழுவதும் ஒரு சமூக மக்களின் வீடுகளும் “ஓட்டு வீடாக” தான் இருக்கிறது. வன்னியர் சமுதாய மக்களிடம் நிலம் கொஞ்சம் இருக்கிறது. சேரி மக்களிடம் பெருபான்மையோர் இடத்தில் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு நிலம் இல்லை.

பொன்பரப்பி கிராமத்தில் இதுவரை சாதிக் கலவரம் நடந்தது இல்லை. இதுவே முதல்முறை, இதற்கு முன்பு நடந்த அனைத்து தேர்தல்களிலும் இரு சமுதாயம் கட்சி ரீதியாக ஒன்றிணைந்தே செயல்பட்டு உள்ளனர்.

கிராமத்தில் பறையர், வன்னியர் சமூக மக்கள் உறவுமுறை போன்றே பழகி உள்ளனர். அனைத்து விடயங்களிலும் உறவுமுறை அடிப்படையிலே இருவரையும் மாறி மாறி அழைத்துக்கொண்டு உள்ளனர்.

பறையர் சமூகத்தைச் சார்ந்த பெரும்பான்மையோர் சென்னையில் உள்ள கோயம்பேடு மார்க்கெட்டில் வேலை செய்து உள்ளனர். கல்லூரிப் படிப்பை முடித்தவர்களாக இளை ஞர்கள் இருக்கின்றனர். வேலையில்லாமல் சென்னையில் ஹோட்டல், மார்க்கெட் போன்ற பகுதியில் வேலை செய்துகொண்டு இருக்கின்றனர்.

வன்னியர் சமூகத்திலும் பெரும்பான்மையோர் இதே நிலையில்தான் இருக்கின்றனர். விவசாயிகளாக, தினக் கூலிகளாக இருக்கின்றனர்.

பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் சிதம்பரம் தொகுதியில் முனைவர். திருமாவளவன் அவர்கள் மதசார்பற்ற கூட்டணியின் வேட்பாள



ராக போட்டியிடுகிறார் என்று உறுதியானவுடன், பொன்பரப்பி கிராமத்தில் உள்ள பறையர் சமுதாய மக்கள் ஒன்று கூடி தங்களது வாக்குகளை பானைச் சின்னத்திற்கு அளிப்பது என்றும், சேரிகளுக்குள் மற்ற கட்சியின் சின்னங்கள் வரைய வேண்டாம் என்றும் முடிவு செய்து உள்ளனர்.

நாமும் வன்னியர் தெருவிற்குள் பானை சின்னத்திற்கு வாக்கு கேட்டுப் போக வேண்டாம் என்று முடிவு செய்துள்ளனர். வன்னியர் சமூக திமுக பொறுப்பாளர்களிடம் கலந்து ஆலோசித்து, வாக்குப்பதிவு தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே வன்னியர் சமூகத்தில் உள்ள திமுக பொறுப்பாளர் களில் ஒருவர் பறையர் சமூகத்தில் இருக்கும் விசிக பொறுப்பாளர்களிடம் வாக்குப் பதிவு அன்று எங்க ஆளுங்க குறிப்பாக (இந்து முன்னணி பாமக காரர்கள்) ஏதாவது பிரச்சனை பண்ணலாம்னு திட்டம் போடுகிறார்கள். அதனால் உங்கள் சமூகத்தார் காலையிலே வாக்கு அளிக்க ஏற்பாடு செய்துவிடுங்கள் 10மணிக்குள் முடித்துவிடுங்கள். அப்புறம் அவர்கள் ஏதாவது பிரச்சனை செய்தால் எங்களால் ஒன்னும் செய்ய முடியாது நானும் படையாட்சி அவனும் படையாட்சி அவனுங்க ஏற்கனவே நான் என் வீட்டில் பானை சின்னம் வரைந்ததால் கடும் கோபத்தில் உள்ளனர் என்று கூறியுள்ளார்.

குறிப்பாக, கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக இந்து முன்னணி இந்தப் பகுதியில் காலூன்றி வளர்ந்து வருகிறது. அங்கு இருக்கும் வன்னியர் இளைஞர்களை சமீபகாலமாக அவர்களே வழி நடத்தி வருகின்றனர். அந்த பகுதியில் இந்து முன்னணியைச் சார்ந்த மாவட்ட பொறுப்பாளர் இராஜேந்திரன் இருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. அரியலூர் நந்தனி கொலை வழக்கில் தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

18.04.2019 அன்று தலித் மக்கள் அனைவரும் பெரும்திரளாக காலை 8 மணி முதலே வாக்களிக்க வந்து கொண்டு இருந்தனர்.

10 மணிக்குள் 400 முதல் 500 வாக்குகள் தலித் மக்கள் அளித்துவிட்டனர். இந்த சம்பவம் வாக்குச் சாவடியில் இருந்த பா.ம.க. இந்து முன்னணி சார்ந்தவர்களுக்கு மிகவும் எரிச்சல் வூட்டும் நிகழ் வாக இருந்துள்ளது.

வாக்குச்சாவடியல் இருந்த வன்னிய சமூகத்தை சார்ந்த இளைஞர்கள் வாக்களிக்க வந்த மக்களை கொச்சை வார்த்தைகளில் திட்டி உள்ளனர். இதனை கண்டுக்கொள்ளாமல் வாக்களித்து விட்டு வந்துள்ளனர்.

தலித் சமூகத்தில் இருந்து 45 வயதுடைய ஒருவர் வாக்களிக்க செல்லும் போது அவரை தகாத வார்த்தையில் திட்டி இருக்கின்றனர். அதனை கண்டுகொள்ளாமல் அவர் வாக்களிக்க உள்ளே சென்று உள்ளார். வாக்களித்து விட்டு வெளியே வரும்பொழுது அவர் முன்னாடியே பானையை உடைத்து உள்ளனர் வன்னியர் இளைஞர்கள்.

அவர் ஏன்டா இப்படி செய்கிறீர்கள்" என்று கேட்டுவிட்டு வன்னியர் பகுதியைச் சார்ந்த தி.மு.க.பொறுப்பாளர்களிடமும் காவல்துறை யிடமும் தகவல் தெரிவித்துவிட்டு, சேரிச் பகுதிக்கு நடந்து சென்று உள்ளார். காவல்துறை அந்த இளைஞர்களை முதலில் கண்டித்து இருக்கிறார் கள். வன்னிய சமூகத்தில் இருக்கும் சிலரிடம் முறையிட்டும் இருக்கிறார்கள்.

வாக்குச்சாவடி அருகே இருக்கும் சாலைக்கு அருகில் வன்னிய சமுதாயத்தைச் சார்ந்த மாற்றுத் திறனாளி ஒருவர் மதுபாட்டில்களை விற்பனை செய்து கொண்டு இருந்திருக்கிறார். சேரிப் பகுதிக்கு விற்பனை செய்வது தொடர்பாக பேசிக்கொண்டு இருந்திருக்கிறார்.

வாக்களித்துவிட்டு சாலையில் வீட்டுக்கு சென்று கொண்டு இருந்த அவர் இதனை காதில் வாங்கிக் கொண்டு "மதுவிற்பதை உங்கள் பகுதியோடு நிறுத்தி விடுங்கள் சேரி பகுதிக்கு வேண்டாம் பானையை போட்டு உடைக்கிறார்கள் நீ மதுவிற்கு சேரிக்கு ஆள் அனுப்புகிறார் பிரச்சனை செய்ய வேண்டும் என்றே இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்களா என்று கேட்டுவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்கிறார்.

அப்பொழுது அங்கு மது அருந்திக்கொண்டு இருந்த முதியவர் ஒருவர் தட்டுத்தடுமாறி விழுந்து எழுந்து அவரை தகாத வார்த்தையில் திட்டுகிறார். இவரும் பதிலுக்கு ஒன்றை கூறிவிட்டு வீட்டிற்கு விரைகிறார்.

நடந்த நிகழ்வுகளை சேரிப் பகுதிக்கு வந்து கூறுகிறார் அங்கு இருக்கும் இளைஞர்கள் இதனால் கோபம் அடைகின்றனர். அங்கு இருக்கும் விசிக பொறுப்பாளர்கள் இளைஞர்கள் யாரையும் அங்கு செல்ல வேண்டாம் எதுவும் அவர்களிடம் கேட்க வேண்டாம் என்று கூறியுள்ளனர். இளைஞர்கள் அனைவரும் சேரிப் பகுதிக்குள் இருக்கும் தெருவின் தொடக்கத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டு இருந்திருக்கின்றனர்.

மதுவிற்ற இடத்தில் நடந்த நிகழ்வை அங்கு இருக்கும் வன்னியர் இளைஞர்கள் அறிந்து கொண்டு...

10 பேர் கொண்ட கும்பல் சேரிப் பகுதிக்கு இரு சக்கர வாகனங்களில் வந்து தெருவின் முகப்பு பகுதியில் நின்றுகொண்டு பானையை சாலையில் போட்டு உடைத்து விட்டு நாங்க இப்படித்தான் பன்னுவோம் டா உங்களலாம் ஓட்டு போட விட்டதே பெரிய விஷயம் அப்புறம் என்னடா பானை உடைச்சானுங்க அத உடைச்சானுங்கனு புலம்பிகிட்டு ரோட்டில் போறிங்க சொல்ல முடியாத வார்த்தைகளைச் சொல்லி வாங்கடா என்று தகாத வார்த்தைகளை கூறி திட்டி உள்ளனர். சேரிப் பகுதியில் இருந்து இளைஞர்கள் சிலர் சென்று இதனை தட்டிகேட்டனர்.

10 பேர் கொண்ட கும்பலில் இருந்து ஒருவன் "என்ன திமிராப் பேசுற என்று சேரிப் பகுதி இளைஞரை முதலில் தாக்குகிறார். தகாத வார்த்தை களால் திட்டுகிறார். உடனடியாக அங்கு இருந்த சேரி இளைஞர்களும் பதிலுக்கு தாக்கு கின்றனர். உடனடியாக விசிக பொறுப்பாளர் அருகில் பாதுகாப்பு பணியில் இருந்த காவல் துறையினரை அழைத்து வந்து பிரச்சனைகளை நிறுத்துகிறார்.

சத்தத்தைக் கேட்டு சேரிப் பகுதியில் இருந்த மக்கள் சாலைக்கு அருகில் வந்தனர். வன்னியர் பகுதி மக்களும் சேரி அருகில் வந்தனர் காவல்துறை தலையீட்டால் பிரச்சனை தொடராமல் முடிக்கப் பட்டது. அனைவரும் கலைந்து சென்றனர்.

காவல் துறையினர் சேரிப் பகுதியை விட்டு சென்ற 15 நிமிடங்களில் 100 மேற்பட்ட வன்னியர் சமூகத்தை சார்ந்தவர்கள் கைகளில் கம்புகள், உருட்டு கட்டைகளுடன் சேரி பகுதிக்கு வருகின் றனர் சாலையில் அவர்கள் வருவதை அறிந்த சேரி இளைஞர்கள் கூச்சலிட்டு அனைவரையும் வீட்டின் உள்ளே செல்ல சொல்லுகின்றனர் பெண்கள், குழந்தைகள், முதியவர்களை சேரியில் இருக்கும் இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினர் 15,20 நபர்கள் சேரி நுழைவு பகுதியில் வந்து கொண்டு இருந்த வன்னியர்களை தடுக்கச் செல்கின்றனர். தடுக்கச் சென்ற இளைஞர்களை சாதிவெறி கும்பல் உருட்டு கட்டையால், கம்பிகளால் தாக்கிவிட்டு சேரியின் உள்ளே வருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்டோர் வருவதால் தலித் சமூகத்தைச் சார்ந்தவர்கள் அவர்களிடம் இருந்த தப்பித்துச் செல்கின்றனர். சேரியில் உள்ளே புகுந்த சாதிய கும்பல் சேரியில் இருக்கும் வீடுகள் முழுவதையும் சூறையாடுகின்றனர்.

தகாத வார்த்தைகளால் பேசி, வெளிய வாங்கடா உங்களுக்கு அவ்வளவு திமிறா என்று கூறிக் கொண்டே இருசக்கர வாகனங்கள் சேரியில் இருந்த விசிக கொடிகள் பாபாசாகேப் அம்பேத்கர் பதாகை களை சேதப்படுத்தி உள்ளனர். சேரிப் பகுதிக்கு வரும் தண்ணீர் குழாய்களை அடித்து நொறுக்கி உள்ளனர். ஒரு இரு சக்கர வாகனத்தை எரித்து உள்ளனர்.

அரைமணி நேரமாக இத்தகைய கொடூர நிகழ்வுகள் நடந்து கொண்டு இருக்கிறது. அப்பொழுது நான்கு காவல்துறையினர் மட்டுமே அங்கு வந்துள்ளனர். அப்பொழுது அவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. பின்பு காவல்துறை யினர் அதிகளவில் வருவதைப் பார்த்து, சாதியக் கும்பல் சேரிக்கு பின்புறம் இருக்கும் ஓடை வழியாக தப்பித்துச் சென்று உள்ளனர்.

சாதியக் கும்பல்கள் பயன்படுத்திய 5,6 அடி கொண்ட கம்புகளின் முனைகளில் ஆணி அடித்தது தயார் செய்து எடுத்து வந்துள்ளனர்.

பொன்பரப்பி பகுதியைச் சார்ந்த வன்னியர்கள் மட்டும் தாக்குதலை நடத்தவில்லை குடிகாடு பகுதியை சார்ந்த வன்னியர்களும் சாதிவெறி கும்பலில் இருந்து உள்ளனர்.

இத்தகைய தாக்குதலுக்கு முக்கிய காரணம்

முனைவர் திருமாவளவன் அவர்களின் வெற்றியை சீர்குலைக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

இதற்கு முன்பு நடந்த தேர்தல்களில் பல்வேறு கட்சிகளில் சிதறி கிடந்தது மக்கள் அரசியல் ரீதியாக இந்த தேர்தலில் ஒன்றாக நிற்பதை அவர்களால் சகித்துகொள்ள இயலவில்லை.

இந்து முன்னணி அமைப்பினர் மற்றும் பா.ம.க.வினரால் திட்டமிட்டே இத்தகைய நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

செயல் திட்டத்தை இந்து முன்னணி சார்ந்த இராஜேந்திரன் பாமக பொறுப்பாளருமே தீட்டி உள்ளனர்.

இந்தக் கலவரத்தால் 10 இளைஞர்களுக்கு காயம் ஏற்பட்டு உள்ளது அதில் ஒருவர் மிகவும் மோச மான நிலையில் தஞ்சை மருத்துவமனையில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலர் அரியலூர் ஜெயங்கொண்டம் மருத்துவ மனை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டு வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டு உள்ளன.

இருபதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டு உள்ளன.

ஒரு இருசக்கர வாகனம் தீயிட்டு எரிக்கப்பட்டு உள்ளது.

பெண்கள் குழந்தைகள் சிலருக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது.

வீட்டின் திண்ணைப் பகுதியில் அமர்ந்து இருந்த ஒரு முதியவரின் விரல்கள் சாதி வெறியர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் முன் இருந்த வேலிகள் மற்றும் மாட்டு கொட்டாய்கள் சேதப்படுத்தப்பட்டு உள்ளது.

சேரிப்பகுதிக்கு வரும் குடிநீர்க் குழாய்கள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் மற்றும் விசிக மன்ற பதாகைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டிற்கு வெளியே இருந்து பாத்திரங்கள் சேதமாகி உள்ளன.

பொன்பரப்பி கிராமம் முழுவதும் மயான அமைதி நிலையில் இருக்கிறது.

ஊரின் உள்ளே நுழையும் போதே ஒரு வித அச்சம் ஏற்படுகிறது. ஊரின் நுழைவுபகுதியில் அக்சிட்டியை பெரிய அளவில் வைத்துள்ளனர். ஆங்காங்கே வன்னியர் சங்கம் மற்றும் பாமக கொடிகள் பறக்கிறது.

எது சேரித் தெரு ஊர்த் தெரு எளிதாக அடையாளம் காண இயலவில்லை. அடிப்படை வசதிகள் இல்லாத கிராமம் போன்றே தோற்ற மளிக்கிறது.

சேரிப் பகுதி முழுமையாக காவல்துறை கட்டுப் பாட்டில் உள்ளது. சேரிப் பகுதியின் உள்ளே காவல்துறையினர் மற்றும் மாற்று உடையில் புலனாய்வு துறையினர் வலம் வருகின்றனர்.

வெளிஆட்கள் மற்றும் கட்சி முற்போக்கு அமைப்பு நிர்வாகிகள் யாரையும் சேரியின் உள்ளே காவல்துறையினர் அனுமதிக்கவில்லை. சேரிப் பகுதிக்கும் செல்லும் அனைத்து பாதைகளிலும் காவல்துறையினர் இருக்கின்றனர்.

சேரிப் பகுதியில் இருந்தும் யாரும் வெளியே செல்ல முடியவில்லை.

சேரிப் பகுதியில் இருக்கும் முக்கியமான நபர் களை சமாதானம் செய்யும் வேலை மிக தீவிரமாக காவல்துறை உதவியுடன் நடைபெற்று கொண்டு இருக்கிறது ஒரு புறம்.

சேரிப் பகுதியில் இருக்கும் பெண்களை அழைத்து பணம் தருவதாக மற்றும் உதவி செய்வதாக வன்னியர் சமூகத்தில் இருந்து ஒரு முக்கிய நபர் அரசு அதிகாரிகள் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

பெண்கள் எதிர்ப்பு தெரிவிக்க அவர்கள் அங்கு இருந்து சென்றுவிட்டனர்.

துண்டுச் சீட்டில் தொலைபேசி எண்ணை ஒருவரிடம் எழுதி கொடுத்துவிட்டு.

சேரிப் பகுதியில் இருக்கும் இளைஞர்கள் அழைத்து புலனாய்வு துறையினர் நண்பர்கள் போல உரையாடி செய்திகளை அவர்களிடம் இருந்து அறிந்து கொள்ளுகின்றனர்.

பெண்களும் குழந்தைகளும் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். குறிப்பாக ஒரு பெண் குழந்தை இன்னும் அந்த அச்சத்தில் இருந்து மீளவே இல்லை. நடந்த நிகழ்வை பற்றி பேசிகொண்டு இருக்கும் போதே அழுகிறாள். புலம்பல்கள் செல்லும் இடமெல்லாம் கேட்கின்றன. பெரிய அளவில் அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வு இல்லாதவர்களாகவே இருக் கின்றனர்.

●



# தமிழீழத் தமிழர்களின் குருதி இங்கிலாந்திடம் நீதி கேட்கிறது!

வணிகம் என்ற பெயரில் உலக நிலப்பரப்பு களையும் நீர்ப்பரப்புகளையும் ஆக்கிரமித்துக் கொண்ட இங்கிலாந்து, யார் யாரிடம் இருந்து, எந்தெந்தப் பகுதிகளை ஆக்கிரமித்ததோ அவை களை, அவர்களிடமே திரும்பக் கொடுக் காமல் செய்த தவறின் விளைவு, பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளானார்கள்.

தமிழர்களால் ஆட்சி, அதிகாரம் செய்யப்பட்டு வந்த தமிழீழப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து, தங்களின் ஆட்சியின் வசதிக்காக ஒன்றிணைத்து, ஆண்டு, அனுபவித்துவிட்டு, எல்லாப் பகுதிகளை யும் சிங்களவனிடம் கொடுத்துவிட்டு கப்பலேறி விட்டனர். அந்தக் கெடு செயல் காரணமாகவே, இலங்கையில் நாங்கள் பெரும்பான்மையினர் நீங்கள் சிறுபான்மையினர் என்று தமிழர்களை இன்று வரை கொன்று வருகின்றனர் சிங்களர்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை வேண்டு மானால் தமிழர்கள் சிறுபான்மையாக இருக்கலாம். தமிழீழத்தைப் பொறுத்தவரை தமிழர்களே பெரும்பான்மையினர். ஆனால், சிங்களரின் இன அழிப்பு தொடர்ந்து கொண்டே இருந்தால் தமிழீழத்திலும் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆகிவிடுவார்கள். தமிழர்களின் நிலங்களில் புத்த ஆலயங்களும், சிங்களவர்களின் குடியேற்றங்களும் நித்தம் நித்தம் நடந்து வருகின்றன. ‘நிலம் எங்களுக்கு உரியது’ என்ற உறுதிப் பத்திரத்தை, ஆக்கிரமிப்பு, அயோக்கிய சிங்களரிடம் தமிழர்கள் காண்பித் தாலும், அது ஏற்றுக் கொள்ளப்படாமல் தமிழர்கள் நிலம் அற்றவர்களாக விரட்டப்படுகிறார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியதும், அறத்தை காக்க வேண்டியதும், தமிழர்களின் உரிமையை மீட்டுத் தர வேண்டியதும் இங்கிலாந்து நாட்டின் கடமை.

குற்றமில்லாத தமிழர்கள் சிந்திய குருதி, இங்கிலாந்துக்காரர்களிடம் நீதியைக் கேட்கிறது. தாங்கள் செய்த தவற்றிலிருந்து தப்பிக்க, பன்னாட்டு மன்றத்தில் பேசி, தமிழர்களுக்குரிய நிலத்தை தமிழர்களிடமே ஒப்படைக்க இங்கிலாந்து நாடு முயற்சி எடுத்து நிறைவேற்ற வேண்டும். அறச்சீற்றம் பொல்லாதது. தமிழீழ மக்கள் அறச்சீற்றம் அப்படிப் பட்டதுதான். விடுதலை தமிழீழம் மட்டுமே அறச்சீற்றத்தைத் தணிக்கும் மருந்து.

**வேர்மகள்.**



# கோடை காலத்தில் உதடுகள்!

கோடை காலத்தில் புற ஊதாக்கதிர் வீச்சுகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பெண்களின் உதடுகள் பொலிவிழந்து நிறம் மாறத் தொடங்கும். ஒரு சில சமையல் பொருட்களைப் பயன்படுத்தியே உதடுகளை இயல்பான நிறத்திற்கு கொண்டு வந்து விடலாம்.


உதடுகளில் உள்ள இறந்த செல்களை அப்புறப்படுத்தவதற்கு வெள்ளை சர்க்கரையை பயன்படுத்தலாம். வெள்ளைச் சர்க்கரையுடன் வெண்ணெய் சேர்த்து நன்றாக குழைத்து, வாரம் மூன்று முறை உதட்டில் தடவி வந்தால் உதடுகள் பொலிவு பெறும்.

உதட்டில் படர்ந்திருக்கும் கருமையைப் போக்குவதில் தேனுக்கும் முக்கியப் பங்களிப்பு இருக்கிறது. இரவில் தூங்கச் செல்வதற்கு முன் தினமும் உதட்டில் தேன் தடவி வரலாம். சில வாரங்களிலேயே நல்ல பலன் கிடைக்கும். உதடும் மிருதுவாகி விடும்.

எலுமிச்சைச் சாறை இரவில் சிறிது நேரம் உதட்டில் தடவி மசாஜ் செய்துவிட்டு நீரில் கழுவி விட வேண்டும். பீட்ரூட்டை சாறு எடுத்தும் உதட்டில் தடவி வரலாம். அடிக்கடி அதனைத் தடவி வந்தால் கருமை நிறம் மறையத் தொடங்கிவிடும். ஐஸ் கட்டிகளையும் பயன்படுத்தலாம்.

உதடு வறட்சி, உதடு வெடிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு ஐஸ் கட்டிகள் நிவாரணம் தரும். அவை உதட்டில் ஈரப்பதத்தைத் தக்கவைத்து உதடு பொலிவுக்கு வித்திடும். ஸ்ட்ராபெர்ரி, ராஸ்பெர்ரி பழங்களை மசித்து, அதனுடன் தேன் மற்றும் கற்றாழை ஜூஸ் சேர்த்து உதட்டில் தடவிவிட்டு, ஐந்து நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். ஆலிவ் ஆயிலும் உதட்டு பொலிவிற்கு உதவும்.

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**


அழகி
AZHAGI
Designer Party wear
traditional Sarees
Lehangas
Salwars
Kurtis
fashion jewellery - AD
Matte
Oxidized silver
kundan jewellery
All at affordable price, without compromising the quality.
Shipping done to worldwide UK, US, Canada and India
www.facebook.com/azhagi.sarees
+44 7404657474
Azhagisarees@gmail.com
www.azhagi.co.uk

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

